Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

# EELA NADU

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14,டாம் வீதி, கொழும்பு.

போன் 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 3 ஆம் நாள் ஜ. ஆகிர் 9 (18-11-61) சனிக்கிழமை இதழ் 237

# வல்வெட்டித்துறையில் நடந்தது "பச்சைப் படுகொலை"

## பார்லிமெண்டில் டாக்டர் நாகநாதன் கண்டனம்

கொழும்பு, வெள்ளி

**வல்வெட்டித்துறை ராணுவத்தினர் சுட்டதால் ஒருவர் மாண்ட சம்பவம்பற்றி பார்லிமெண்டில் டாக்டர் நாகநாதன் ஒரு கேள்வி கேட்டு, இது ஒரு படுகொலையாகுமென்றும் பிரதம மந்திரிக்கு தப்பான தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் உணர்ச்சியுடன் காரசாரமாகப் பேசினர். சமசமாஜக் கட்சி மெம்பர் லெஸ்லி குணவர்த்ன இவ்விஷயமாக விசாரணை நடத்துமாறு வற்புறுத்தினர். நிதிமந்திரி அளித்த பதிலில் மாஜிஸ்திரேட் இது பற்றி விசாரித்து வருவதாகவும் தாம் எதுவும் இந்நிலையில் கூறவிருப்பவில்லை என்றும் கூறினர்.**

இன்று பார்லிமெண்டில் வல்வெட்டித்துறை துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தைப்பற்றி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கூறியதாவது:-

ராணுவத்தினர் ஒருவரைச் சுட்டுக் கொன்றனர். மற்றொருவரை அடித்து இம்சித்திருக்கிருர்கள் மறுநாட்காலையில் அச்செம்படவரின் உடல் அகப்பட்டிருகிறது. இவ்விஷயமாகப் பிரதம மந்திரிக்கு தப்பான செய்திகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

கட்டுமரத்தைக்காண்டு கள்ளக்கடத்தல் செய்யமுடியாது. தகப்பனர் வலையைக் கொண்டு வந்தார். மகன் கட்டுமரத்தைக் கடலில் செலுத்தி இடுப்பளவு தண்ணீரில் நின்றுகொண்டிருந்தார். மற்றவர்கள் பாய் மரத்தைத் தயாரித்துக்கொண்டிருந்தார்கள்.

இச்சமயத்தில்ராணுவத்தினர் வந்து தகப்பனை அடித்திருக்கிருர்கள். மகன் குறுக்கிட்டார். மகனைத் துப்பாக்கியால் ராணுவத்தினர் சுட்டிருக்கிருர்கள். பக்கத்திலிருந்தவர்கள் இறந்தவர் இராணுவத்துக்குப்பயந்து தண்ணீருக்குள் ஒழித்திருக்கிருர்என நினைத்தனர். ஆனல்மறு நாட்காலையில் அவரது உடல் கரையில் மிதந்து வந்தது. படகிலிருந்துயாரும் சுட்டிருக்கவேமுடியாது. அதில்துப்பாக்கியுமில்லை. துப்பாக்கியை யாரும் கொண்டுவரவுமில்லை. பிரதமருக்கு இச் சம

(8ம் பக்கம் பார்க்க)

## எஸ். ஜே. வி. இன்று வருகிருர்

### மகத்தான வரவேற்பு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், சனி

**தடுப்புக்காவலிலிருந்து லண்டனுக்குச் சிகிச்சை பெறுவதற்காகச் சென்று தாயகம் திரும்பியிருக்கும் திரு. செல்வநாயகம் இன்று முதன் முதலாக யாழ்ப்பாணத்துக்கு வருகிருர்.**

காங்கேசன்துறைத் தொகுதிப் பிரதிநிதியும் தமிழரசுக் கட்சி பாராளுமன்றக் குழுத் தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்று காலை 11-30 மணியளவில் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்குவார். விமானநிலையத்தில் வைத்து அவருக்கு ஓர் மகத்தான வரவேற்பளிப்பதென காங்கேசன்துறைப் பட்டினசபை அங்கத்தவர்கள் தீர்மானித்திருக்கின்றனர். பட்டின சபைத் தலைவர் திரு. ஏ. இராசரத்தினம் தலைமையில் வரவேற்பளிப்பதற்கு சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை விடுமுறைகளான சனிக்கிழமை நடைபெறும் இந்த வரவேற்பு வைபவத்தில் பெருந் தொகையான மாணவர்களும் பிரமுகர்களும் தமிழ் எம். பி.க்களும் கலந்துகொள்ளவிருப்பதாக அறியப்படுகிறது.

நேற்று நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டம், தமிழ்ப் பிரமுகர்கள் சந்திப்பு ஆகியவற்றில் கலந்துவிட்டு தமிழ் எம். பி. க்களும் தமிழ்ப் பிரமுகர்களும் இன்று காலை யாழ்ப்பாணம் வந்துசேர்கிருர்கள். திரு. செல்வநாயகமும் அவரது பாரியாரும் இன்று விமான நிலையத்தில் வந்திறங்கும்போது தமிழ் எம். பிக்களும் அங்கு ஏற்பாடாகியிருக்கும் வரவேற்பு வைபவத்தில் கலந்துகொள்கிருர்கள்.

### கிழக்கு மாகாண எம். பி.க்கள்

தமிழரசுக் கட்சித்தலைவரும் பட்டிருப்பு எம். பி.யுமான திரு. எஸ் எம். இராசமாணிக்கம், மட்டகளப்பு எம். பி திரு. எஸ். இராசதுரை, திருமலை எம். பி. திரு. என். ஆர். இராசவரோதயம், செனட்டர் திரு எம். மாணிக்கம் உட்பட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எம். பி.க்களும் பிரமுகர்களும் இந்த வரவேற்பு வைபவத்தில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வருகிருர்களெனத் தெரிகிறது.

### உடுப்பிட்டித்தொகுதி வரவேற்பு

உடுப்பிட்டிஎம். பி. திரு எம். சிவசிதம்பரம் தலைமையில் உடுப்பிட்டித் தொகுதி மக்களும், இதே போன்று கோப்பாய், சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நல்லூர், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, உடுவில் தொகுதிகளின் மக்களும் அவ்வப்பகுதி எம். பி.க்கள் தலைமையில் திரு. செல்வநாயகத்துக்கு வரவேற்பளிப்பார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பார்லிமெண்டில் நிதிமந்திரி பிரேரணை

கொழும்பு, வெள்ளி

இன்று காலை பார்லிமெண்டில் நிதிமந்திரி ஒரு பிரேரணை கொண்டு வந்தார். மந்திரி திரு. இலங்கரத்தினவுக்கும் திருவாளர்கள் ஆசீர்வாதம், எம். எஸ். தேமிஸ் இவர்களுக்கும் விசேஷ கிராட்யூட்டியும் பென்ஷனும் கோரினர்.

திரு. வி. என். நவரத்தினம் இது பற்றிப்பேசுகையில் திரு. ஆசீர்வாதம் தமக்கு அதிகமான தொகை கிடைக்கவேண்டுமெனக் கோர தீர்மானித்துள்ளதால் அவர் விஷயத்தை சிறிதுகாலத்துக்கு ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

---

## கொழும்பு மாநகரசபை அங்கத்தவர் ராஜினமா?

கொழும்பு, வெள்ளி

கொழும்பு கொச்சிக்கடை தெற்கு நகரசபை(யு. என். பி) அங்கத்தவர் திருமதி ஆயிஷா ராவுப் தமது அங்கத்துவப் பதவியை ராஜினமாச்செய்யத் தீர்மானித்துள்ளார்.

அவர் ராஜினமாச் செய்ய உத்தேசித்துள்ளதற்கான காரணம் பற்றிக் கூறியதாவது:

'நான் அதிபராகக் கடமையாற்றும் முஸ்லிம் மகளிர் கல்லூரி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனல் நான் அரசியலைத்துறக்கவேண்டும் அல்லது கல்லூரி அதிபர் பதவியிலிருந்து விலகவேண்டும். நான் இந்தக் கல்லூரியுடன் நீண்டகாலம் தொடர்பு கொண்டு வந்துள்ளதாலும் முஸ்லிம் சமூகத்தின் நன்மை கருதியும் நான் தொடர்ந்து இக்கல்லூரி அதிபராகக் கடமையாற்றத் தீர்மானித்துள்ளேன்.

## பிரதேச சபைகள் மசோதா

### திருத்துவதற்கு முக்கிய சிபார்சு

### அமைச்சர்கள் பரிசீலனை

கொழும்பு, வெள்ளி

**பிரதேச சபைகள் நகல் மசோதா விரைவில் அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இதற்குமுன் நகல் மசோதாபற்றி உள்நாட்டு கலாசார விவகார அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்காவும் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. மகாநாம சமரவீராவும் கலந்தாலோசனை செய்வர்.**

உள்நாட்டு அமைச்சு அதிகாரிகளையும், ஸ்தலஸ்தாபன வீடமைப்பு அமைச்சு அதிகாரிகளையும் கொண்டு நியமிக்கப்பட்ட குழுவொன்று பிரதேச சபைகள் மசோதாவுக்கு சில திருத்தங்களை சிபார்சு செய்துள்ளது.

இச்சபைகள் 'மாவட்டசபைகள்' என்று அழைக்கப்பட வேண்டுமென்றும் வீதி அமைப்பு, கிராம அபிவிருத்தி வேலைகள், சமூக சேவை வேலைகள் ஆகியவைகளையே இச்சபைகள் கவனிக்கவேண்டுமென்றும் அக்குழு சிபார்சு செய்துள்ளது.

காணி உரிமைகள், காணிப் பங்கீடு, வருமானம், கலால் மற்றும் அலுவல்கள் தொடர்ந்து கச்சேரிகளே செய்துவர வேண்டுமென்று குழு சிபார்சு செய்துள்ளது

மாவட்ட சபைகள், மாநகரசபைகள், நகரசபைகள், பட்டினசபைகள் முதலிய ஸ்தலஸ்தாபன சபைகளின் பிரதிநிதிகளைக்கொண்டிருக்க வேண்டுமென்றும் குழுசிபார்சு செய்துள்ளது.

குழுவின் சிபார்சுகளை இரு அமைச்சர்களும் பரிசிலனை செய்தபின் நகல்மசோதா அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

பிரதேச சபைகள் நகல் மசோதா காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவினல் தயாரிக்கப்பட்டது.

## சபையைக் கூட்டியது சட்ட விரோதமா?

கொழும்பு, வெள்ளி

பார்லிமெண்ட்சபை, சபாநாயகர் திரு. பெல்போலா தலைமையில் இன்றுகாலை கூடியது. லண்டனிலிருந்து திரும்பிய திரு. எஸ், ஜே. வி. இன்று பார்லிமெண்டில் பிரசன்னமாகியிருந்தார்.

அவசரகாலத்தை நீடித்திருப்பதாக கவர்னர் ஜெனரல் வெளியிட்ட பிரகடனத்தை தலைவர் சபையில் படித்தார்.

டாக்டர் என். எம். பெரேரா ஓர் உரிமைப் பிரச்சினையைக் கிளப்பிக் கூறியதாவது:

15-வது நிரந்தர விதிப்படி பார்லிமெண்டை சபாநாயகர் கூட்ட வேண்டும். ஆனல் பார்லிமெண்ட் கூட்டப்பட்டது சரியானது என்ருலும் தவருன முறையில் இது செய்யப்பட்டுள்ளது. பார்லிமெண்டைக் கூட்டுவதாகதலைவரே அறிவித்திருக்கவேண்டும்.

கோப்பாய் எம். பி. திரு எம். பாலசுந்தரம் கூறியதாவது:

அரசியல் சட்டத்தை பாதுகாப்புச் சட்டம் மீறிவிடமுடியாது. அரசியல் சட்டம் மீறப்படுவது இது முதல் தடவையல்ல. சரியான காரியத்தை அரசாங்கம் தவருன வழியில் செய்திருப்பதாக டாக்டர் என். எம். பெரேரா கூறினர். ஆனல் அரசாங்கம் எப்போதும் தவருன காரியத்தை தவருன வழியிலேயே செய்கிறது என நான் கூறுவேன். மூதூர் உபதேர்தல் இன்னும் நடைபெருமல் அந்தஸ்தானம் காலியாக இருப்பது முறையற்றதாகும்.

திரு. ஜே. ஆர்.ஜெயவர்தன: பார்லிமெண்ட்கூட்டம் கலைக்கப்பட்ட பின்பே கவர்னர் ஜெனரல் அதைக் கூட்டமுடியும். ஆனல் இப்போது சபை சட்டவிரோதமாகக் கூட்டப்பட்டிருக்கிறது.

தலைவர்:- பார்லிமெண்டைக் கூட்ட கவர்னர் ஜெனரலுக்கு பாதுகாப்புச் சட்டம் அதிகாரமளிக்கிறது.

திரு, ஜே. ஆர். ஜெயவர்தன: பார்லிமெண்ட்கூட்டம் கலைக்கப்படாதிருக்கையில் கவர்னர் ஜெனரல் அதைக்கூட்ட முடியாது.

தலைவர்:- சபையை கவர்னர் ஜெனரல் கூட்டியது ஒழுங்கானதேயாகும்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி, 18-11-61**

காலை 6-45 உதயகீதம். 6-50 சைவ நற்சிந்தனை. 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை 7-15 தேர்ந்த இசை. 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள். பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை, மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 பரமேஸ்வரி சுவாமிநாதன்-வயலின், இரவு 7-15 நேயர் கடிதம், 7-30 கே. மகாலிங்கம்-பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 அறிவுச்சுழல், 9-45 பாமாலை, 10-00 நேயர் விருப்பம்.

**ஞாயிறு 19-11-61**

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிறிஸ்தவ கீதங்கள், 8-30 ஞானஞ்சலி, 9-00 இஸ்லாமிய சமயப் பாடசாலை, 9-30 கதம்ப இசை, 11-30 சிறுவர் மலர். பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் பகுதி, மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 சிவகாமசுந்தரி விஜயரத்தினம்-பாட்டு, 5-45 மதுவிலக்கு வாரம்-பேச்சு, 6-10 குரல்வகை. 6-15 கோவில் அஞ்சல், 6-30 தாளவாத்தியக் கச்சேரி, இரவு 7-00 மாதர் கேட்டவை. 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 ஏ. சுந்தரம்-பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'வாழ்க்கைப் புயல்'-நாடகம், 9-45 தேர்ந்த இசை. 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2, இரவு 7-10.)

**சனி, 18-11-61**

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 காரைக்குடி வி. ஏ. கமலா-வயலின், பகல் 1-00 துதிப் பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல் இசை, 2-00 காரைக்குடி வி. ஏ. கமலா-வயலின், மாலை 4-45 விவிதபாரதி கர்நாடக சங்கீதம், 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள், இரவு 7-30 'அழகர் குறவஞ்சி'-இசை நாடகம், 8-30 டெல்லி அஞ்சல், 8-45 உவமையில் காளிதாசன், 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

**ஞாயிறு 19-11-61**

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ஆர். எம். ஸவர்ணப்பா-பாட்டு, 8-15 திருப்பாம்புரம் சோமசுந்தரம் சகோதரர்கள் - நாகஸ்வரம், பகல் 12-00 நீங்கள்கேட்டவை. 12-30 சூரியகாந்தி-கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணி மலர், 1-50 வீணை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 ருக்மணி சுந்தரராஜன் - பாட்டு மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசை பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள், இரவு 7-30 ராகமஞ்சரி-நான்காவது தொடர் நிகழ்ச்சி, 8-30 ஆர். எம். ஸவர்ணப்பா பாட்டு, 9-15 வாத்திய இசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 சென்னை அஞ்சல்.

# கதிரியக்கப் பொருளைக் கொண்டு விளக்கு வெளிச்சம்

## ஜெர்மன் நிபுணர்கள் சாதனை

முனிச், நவ. 15

கதிரியக்க சக்தி துகள்கள் பாஸபரஸ் அல்லது எளிதில் எரியும் பொருள்களுடன் சம்பந்தப்பட்டால் வெளிச்சம் ஏற்படுகிறது என்பதை அறிந்து இதைக் கொண்டு வெளிச்சம் தரக்கூடிய விளக்குகளை எப்படித் தயாரிக்கலாம் என்பது குறித்து மேற்கு ஜெர்மன் விஞ்ஞான நிபுணர்கள் முனிச்சிலுள்ள தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர். இவ்விளக்கை அவர்கள் "குளிர்ந்த வெளிச்சம்" என்கிருர்கள்.

சில கைக்கடிகாரங்களை இரவில் பார்த்தாலும் மணி தெரியும். இதற்கு காரணம் ரேடியும் பூசப்பட்ட எண்ணுள்ள தசடேயாகும். இயற்கை உலகில் மின் மினிப் பூச்சிகள் இம்மாதிரி வெளிச்சங்களை வெளிப்படுத்துகின்றன. இந்த கடிகாரத் தகடு இருட்டில் ஒளிவிட அதில் ஒரு சிறிது அளவுக்கு ரேயம் பூசப்பட்டிருக்கிறது. இத அளவு மிகமிகச் சிறிய நுணுக்கமான அளவானதினல் இதனல் கதிரியக்க ஆபத்து எதுவும ஏற்படுவதற்கு வழியில்லை.

ஆனல் ஒரு விளக்கு எரிவதற்கு அதிகப்படியான கதிரியக்க சக்தி உபயோகிக்க வேண்டியிருக்கும். இதனல் கதிரியக்க கிரண வீச்சு அபாயமும் அதிசமாகும். இந்த ஆபத்தில்லாத 'ஐஸடோப்ஸ்'கள் தயாரிக்கப்பட்டு பலவித ஆக்கவேலைகளுக்கு உபயோகிக்கப்படுவதால் அந்த ஐஸடோப்ஸ்களைக் கொண்டே இந்த விளக்குகளைத் தயாரிக்க முடியும்.

இதன்மூலம் தயாரிக்கப்படும் விளக்கு 15 அல்லது 25 வாட் சக்தி கொண்டதாக இருக்கும். கப்பல் அறைகள், கூடாரங்கள், போக்குவரத்து சின்னங்கள் இவைகளில் இவ்விளக்குகளை உபயோகிக்க முடியும் இதுதான் முதல்படி. இன்னும் எவ்வளவோ ஆராய்ச்சிகள் செய்யப்படவிருக்கின்றன.

## ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு 152,000 மாணவர்கள்

கொழும்பு, வியாழன்

இவ்வருடம் டிசம்பர் 5-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு 152,000 மாணவர்கள் தோன்றுவார்கள். சென்ற ஆண்டிலும் இவ்வாண்டு 28,000 மாணவர்கள் அதிகமாகத் தோன்றவிருக்கிருர்கள். 1100 நிலையங்களில் இவ்வருடம் பரீட்சைகள் நடைபெறும். கடந்த டிசம்பரில் இப்பரீட்சைக்கு 124,000 மாணவர்கள் தோற்றினர்கள்.

# ஒவ்வொரு குடும்பமும் வசிக்க சொந்தமான வீடு

## மேற்கு ஜெர்மனியின் லட்சியத் திட்டம்

பான், நவ. 15

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்தது முதற்கொண்டே குடும்பத்தினர் சொந்தத்தில் வீடு கட்டிக் கொள்ளும் திட்டம் மேற்கு ஜெர்மனியில் அமுல் செய்யப்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் இத் திட்டத்துக்கு மேற்கு ஜெர்மன் மக்கள் பேராதரவு அளித்து வருகின்றனர்.

இத் திட்டத்தின் முக்கிய நோக்கம் யுத்தத்தில் நிர்மூலமான இடங்களை சீர்படுத்தி புனர் நிர்மாணம் செய்வதாகும்.

1949ல் அதாவது யுத்தம் முடிந்து நான்கு வருடங்களுக்குப் பின் மேற்கு ஜெர்மனியில் சமார் 50 லட்சம் "சொந்த" வீடுகள் கட்டப்பட்டன. 1951ம் ஆண்டு மேற்கு ஜெர்மனி இதற்கான நீண்ட கால திட்டம் ஒன்றை உருவாக்கியது. பிரதம மந்திரி திரு. அடினேர், ஜெர்மன் மக்கள் சொந்தத்தில் வீடு கட்டிக் கொள்ள வசதி செய்து தருவது அரசாங்கத்தின் கொள்கையாகும் என்று அறிவித்தார். இந்தத் திட்டம் அரசியல், சமூக நலன் கலந்த திட்டம் என்று அவர் விளக்கினர்.

இந்த திட்டத்தின் கீழ், கட்டிடங்கள் கட்டுவதற்கான கடன் வசதிகள், வரிச்சலுகைகள், தவணை முறைகளில் பண உதவி, மற்றும் இதர உதவிகள் எல்லாம் அளிக்கப்பட்டன. பாட்டாளி மக்களில் பெரும்பாலோர் இத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்தனர். குறைந்த வருமானமுள்ளவர்களும் இதனல் பயன்பெற்றனர்.

1948ல் கொண்டு வரப்பட்ட நிதிச் சீர்திருத்தத்திற்குப் பிறகு சமீப காலம் வரை 1320 லட்சம் வீடுகள் சொந்த உடைமைகளாகக் கட்டப்பட்டிருக்கின்றன. பொது மக்கள் இத் திட்டத்தில் சிரத்தை காட்டவில்லை என்ருல் இத் திட்டம் இவ்வளவுக்கு வெற்றி பெற்றேயிருக்காது.

குடியிருக்க அழகான ஒரு வீடு, அதை சுற்றித் தோட்டம். இதை சொந்தமாகப் பெற வேண்டும் என்று ஒவ்வொரு மேற்கு ஜெர்மன் குடும்பமும் ஆசை காட்டியது. இந்த ஆசை இப்போது பெரும்பாலோர் விஷயத்தில் நிறைவேறிவிட்டது.

இத்துடன் ஒவ்வொரு குடும்பமும் தன்னுலான தொகையைச் சேமிக்க வேண்டும் என்ற விஷயத்திலும் கவனம் செலுத்தப்பட்டது.

மூன்ருவதாக சொத்துக்கள் பரவலாக விநியோகிக்கும் முறையும் அரசாங்க கம்பெனிகளைத் தனியாரிடமே ஒப்படைக்கும் திட்டமும் 1957ல் ஆரம்பிக்கப்பட்டது. மிகப் பெரிய தொழில் ஸ்தாபனமான "பிரியுஸாக்" கம்பெனியில் பங்குகள் 2,00,000 சிறு பங்குதாரர்களுக்கு விற்கப்பட்டன. இப்பங்குகளை வாங்கியவர்கள் எல்லாருமே குறைந்த வருமானமுள்ளவர்கள். இதே மாதிரி வால்ஸ்வாகன் வெர்க் என்ற மாபெரும் கம்பெனியும் 150 லட்சம் சிறு பங்குதாரர்களுக்கு விற்கப்பட்டிருக்கிறது.

சொத்துக்களைப் பரவலாக மக்களிடையே விநியோகிக்க மேலும் சில நடவடிக்கைகளை மேற்கு ஜெர்மன் அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கிறது. தனியார் துறையிலுள்ள கம்பெனிகளும் அரசாங்கம் காட்டும் வழியைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளன.

# ஜப்பானிலிருந்து இறக்குமதிப் பொருட்கள்

## இலங்கை குறைத்துக்கொள்ளும்

கொழும்பு, வியாழன்

ஜப்பானிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்வதை இலங்கை குறைத்துக்கொள்ளவிருக்கிறது. இலங்கையிடமிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களைப் போதிய அளவுக்கு ஜப்பான் வாங்காதிருந்தால், ஜப்பானிலிருந்து பொருள் இறக்குமதி செய்வதை இலங்கை அரசாங்கம் குறைத்துக்கொள்ளும். தேயிலை, தென்னந்தும்பு, மிளகு ஆகிய பொருள்களை இன்று இலங்கை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. மோட்டார் கார், சைக்கிள் உட்பட பல பொருட்களை இலங்கை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்கிறது. ரப்பர், புகையிலை உட்பட எமது உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் பலவற்றைத் தம்மிடமிருந்து வாங்குமாறு இலங்கை அரசாங்கம் ஜப்பானைக் கேட்கவிருக்கிறது. ஜப்பானுடன் இதுபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்த இலங்கையிலிருந்து ஒரு வர்த்தகதூதுகோஷ்டி ஜப்பான் செல்லவிருக்கிறது எனத்தெரிகிறது. இலங்கையிடமிருந்து அதிகமான பொருள்களை வாங்குவதற்கு ஜப்பான் விரும்பாவிட்டால் ஜப்பானிலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்வதை இலங்கை அரசாங்கம் குறைத்துக்கொள்ளும் என நம்பப்படுகிறது.

## விற்பனை வரித் திட்டம் தயாராகிறது

கொழும்பு, வியாழன்

விற்பனை வரி அமுல் செய்வதற்கான திட்டத்தை உள்நாட்டு வருமான வரி இலாகா இப்போது தயார் செய்து வருகிறது. இன்னும் ஆறு வார காலத்தில் இத்திட்டம் தயாராகிவிடும் எனத் தெரிகிறது. வரி சேகரிக்கும் முறைகளில் எதுவித ஊழல்களுக்கும் இடமேற்படாத வகையில் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

## எதிரியைக் கைது செய்ய வாரண்ட்

தெல்லிப்பழை, வியாழன்

மல்லாகத்தைச் சேர்ந்த தம்பிமுத்து சண்முகம் என்பவர் 30-9-61-ல் மல்லாகத்திற்கூடாகச் செல்லும் காங்கேசன்துறை யாழ்ப்பாணம் ரஸ்தாவில் தெல்லிப்பழை கிழக்கு வாசியான கந்தையா செல்லத்துரை என்பவரைச் சைக்கிளில் ஏற்றிச் சென்றதாகக் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜி. ஏ. பி. சில்வாவினல் குற்றஞ் சாட்டப்பட்டு மல்லாகம் நீதிபதி முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி கோர்ட்டில் ஆஜராகவில்லை. நீதிபதி திரு வெஸ்லி டி. தாமோதரம் எதிரியைக் கைது செய்யப் பகிரங்க வாரண்ட் பிறப்பித்துள்ளார்.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொ
ல
ர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ட்ரீஸ்லிமிட்.
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J. D. 3.

# கோணநாயகர் ஆலயம்

## அரசாங்கச் சொத்து அல்ல

### திருமலை எம். பி. அறிக்கை

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை கோணநாயகர் ஆலய புனருத்தாரண சபைபற்றி டாக்டர் பாலேந்திரா அண்மையில் விடுத்த அறிக்கைக்கு மறுப்புத் தெரிவித்து இலங்கை புனருத்தாரண சபைச் செயலாளரான திருமலை எம். பி. திரு. என் ஆர். இராஜவரோதயம் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்:-

கோணநாயகராலயம் அரசாங்கத்தின் சொத்தல்ல. இக்கோயிலின் புனருத்தாரண சபை திருமலைவாழ் இந்துக்களின் ஸ்தாபனமாகும். அரசாங்கம் இவ்வாலயத்திற்கு புதிய புனருத்தாரண சபையை நியமனம்பண்ணவோ அல்லது கண்காணிக்கவோ அருகதையற்றது. இந்துக்களுக்கு முக்கியமாக திருமலைவாழ் இந்துக்களுக்கு மட்டும் இவ்வதிகாரங்கள் உண்டு. இவ்வாலயத்திற்குப் பலபாகங்களிலிருந்தும் நிதி வருவது உண்மையே. ஆனல் அதற்காகப் பலபாகங்களிலுமுள்ளவர்களுக்கு அங்கத்துவம் இச்சபையில் கொடுபடவேண்டுமென்பது அதனைக் கேட்பவரின் விபரீத புத்தியைக் காட்டுவதாயுள்ளது. அரசியல் வாதிகள் இப் புனருத்தாரணசபையில் அங்கம் வகிக்கக்கூடாதென்று சொல்வது பெரும் புதிராக இருக்கின்றது.

அரசியல் வாதிகள் இச்சபையில் இடம்பெறக்கூடாதென்பது விந்தையிலும் விந்தை. மஹியங்கனை புனருத்தாரண சபைத் தலைவராக டட்லிசேனநாயக்கா இருக்கமுடியுமாயின் கோணேசராலயம் அதற்கு விதிவிலக்கா?

டாக்டர் பாலேந்திரா தனது வாக்குறுதியின் பேரில் தான் கோணேசர் விக்கிரகங்கள் ஆலயத்தில் வைக்கப்பட்டன வென்று கூறுவது உண்மையைத் திரித்துக் கூறுவதாகும். வழக்கறிஞர் என். எம். மாணிக்கராசா, முன்னுள் திருமலை எம். பி.யான காலஞ்சென்ற திரு. என். சிவபாலனினதும்இடையரு முயற்சியினல் தான் ஒருவித வாக்குறுதியின்றியுமே இவ்விக்கிரகங்களைப் பெற முடிந்தது. இதுதான் உண்மை. புனருத்தாரணசபையின் வரவுசெலவு பொதுமக்கள் பார்வைக்குத் தயாராக இருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

## நேருஜி 20-ந்தேதி திரும்புவார்

புதுடில்லி, நவ. 16

வருகிற 20 ந் திகதி பிரதமர் நேரு வெளிநாட்டு சுற்றுப்பிரயாணத்திலிருந்து புதுடில்லி திரும்புவார்.

---

### தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட் கவுன்ஸில்

மதுரை, நவ. 16

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாட்டுகௌன்ஸில் கூட்டம் இன்று மதுரையில் ஆரம்பமானது. பொதுத்தேர்தல் பற்றி கவுன்ஸில் ஆராயவிருக்கிறது.

---

## ககாரின்

புதுடில்லி, நவ. 16

சோவியத் வானவெளி வீரர் மேஜர் ககாரின் வருகிற 29ம் திகதி புதுடில்லி வருவார். பிரதமர் நேருவின் இல்லத்தில் அவர் 8 தினங்கள் தங்குவார்.

---

### நேட்டோ வெளி மந்திரிகள் மகாநாடு

பாரிஸ், நவ 16

அடுத்தமாதம் பாரிசில் "நேட்டோ" நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

---

### மலாயா பிரதமர்

கோலாலம்பூர், நவ 16

மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் லண்டனுக்குச் செல்லும் வழியில் இன்று சிங்கப்பூர் புறப்பட்டார்.

---

### கல்கத்தாவில் ஜாப் பிரதமர்

கல்கத்தா, நவ 16

ஜப்பானியப் பிரதமர் திரு. இக்கேடா இன்று கல்கத்தா வந்து சேர்ந்தார். நாளைகராச்சி சென்றபின், திங்கட்கிழமை அவர் புதுடில்லிக்கு விஜயம் செய்வார்.

## நேருவுக்கு மெக்ஸிகோ கௌரவ சின்னம்

மெக்ஸிகோ, நவ. 16

இங்கு விஜயம் செய்துள்ள பிரதமர் நேருவுக்கு நேற்றிரவு மெக்ஸிகோ வெளிநாட்டு மந்திரி ஒரு வரவேற்பு உபசாரம் நடத்தினர். அரசாங்கத் தலைவர்களும் பல உயர் அதிகாரிகளும் இவ்விருந்தில் கலந்து கொண்டனர்.

நகரசபையில் நடைபெற்ற ஒரு வரவேற்பில் மெக்ஸிகோ நகரின் கௌரவப் பிரஜையாக அவருக்கு வெள்ளித் திறவுகோலும், தங்கப்பதக்கமும் அளிக்கப்பட்டன. மற்றோர் நிகழ்ச்சியில் சுதந்திர ஸ்தம்பத்தில் நேருஜி மலர் வளையம் வைத்தார்.

"ஆழ்ந்த கல்வியும், திறமையும், பண்பும், உயர்நோக்கமும் கொண்ட இணையற்ற தலைவர்" என, அவருக்கு நகரப் பிரஜா உரிமை வழங்கப்பட்டபோது மேயர் கூறினர்.

### சிந்தனையில் மூழ்கிய நேரு

சிந்தனையில் மூழ்கியிருக்கும் நேருஜியின் படத்தை கடந்த 10 நாட்களாக 5 கோடி டெலிவிஷன் திரைகளிலும்: 1750 தினசரிப் பத்திரிகைகளிலும், சினிமாக்களிலும், மற்றுமுள்ள சஞ்சிகைகளிலும் அமெரிக்கர்கள் தரிசித்தவண்ணம் இருந்தனர் என்று யு. எஸ். செய்தி நிலைய மதிப்பீடு ஒன்று கூறுகிறது. கலிபோர்னியா சர்வகலாசாலையில் 500 இந்திய மாணவர்கள் அவரைக் காணும் பொருட்டு அழைக்கப்பட்டிருந்தனர். ஆனல் அவர்களின் கூட்டாளிகளான 3500 மாணவர்களும் வந்தனர். அவர்களில் பெரும்பாலோர் அமெரிக்கர்.

நேரு பிறந்த தினத்தைக் கௌரவிக்கும் வகையில் லாஞ்ஏஞ்சல்ஸிஸ் கடந்த செவ்வாய்க்கிழமையன்று "நேரு தினம்" அனுஷ்டிக்குமாறு பிரகடனம் செய்யப்பட்து. இரு சிறுமிகள் நேருஜி கழுத்தில் மலர்மாலை அணிவித்து பெரிய பிறந்ததினகேக்கை அளித்தனர். அவர் விமானம் ஏறும்வரை பிறந்ததின வாழ்த்துக்கள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. விமான நிலையத்தில் 90 அமெரிக்க மாணவர்கள் பிறந்தநாள் வாழ்த்துப்பாட்டுப் பாடினர்கள்.

மெக்ஸிகோவில் பாடசாலைப் பெண்கள் பிறந்தநாள் கீதம் பாட பாண்டுவாத்தியம் இசைக்கப்பட்டது.

பங்கீட்டரிசிப் புத்தகங்கள்

## திருப்பிஒப்படைப்பவர்களுக்கு அடையாளச் சீட்டுகள்

கொழும்பு, வியாழன்

அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைத்தவர்களுக்கு, அவர்களுக்கான அடையாளச் சீட்டுகள் வெகுவிரைவில் வழங்கப்படும்.

பங்கீட்டரிசிப் புத்தகங்களில் விதிக்கப்பட்ட வரி காரணமாக பங்கீட்டரிசிப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைத்தவர்களுக்கு உடனடியாகவே பங்கீட்டுச் சீட்டுகளை வழங்கும்படி வர்த்தக, உணவு கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ந உணவுக் கமிஷனருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வருமான வரி செலுத்துவோர் பலர் தமது பங்கீட்டரிசிப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைத்துள்ளார்கள் என உணவு இலாகா வட்டாரங்களால் அறியக்கிடக்கின்றது. கூட்டுறவுப் பண்டகசாலைகளிலிருந்து இவர்கள் வேறு பொருள்களை வாங்கிக்கொள்வதற்கு இவர்களுகு எதுவித உரிமைச் சீட்டும் வழங்கப்படவில்லை.

உபமான்யமாக வழங்கப்படும் அரிசியின் மீதுதான் வரிவிதிக்கப்பட்டதென்றும் எனவே அரிசிப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைத்தவர்கள் வேறு பொருள்களையும் கூட்டுறவுப் பண்டகசாலைகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாதவாறு அவர்களுக்குக் கஷ்டம் விளைவிக்கக் கூடாது என்றும் வர்த்தக,உணவுக்கப்பல்மந்திரி தமது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### ஆசிரியர் இடமாற்றம்

வவனியா, வெள்ளி

வவனியா சி. எம். பாடசாலையில் உதவி ஆசிரியர்களாக இருந்த திரு. த. முத்துலிங்கத்துக்கும், செல்வி யெ. பொன்னம்பலத்துக்கும் இம் மாதம் 15-ம் திகதியிலிருந்து திரு. த. முத்துலிங்கத்துக்கு ஆசிகுளம் ஸ்ரீநிவாசன் வித்தியாசாலைக்கும், செல்வி வி. யெ. பொன்னம்பலத்துக்கு வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலைக்கும் மாற்றம் கிடைத்துள்ளது.

---

### உலக உணவு வங்கி

லண்டன், நவ. 15

உலக உணவு வங்கி ஸ்தாபிப்பதற்கு 50 லட்சம் டாலர்களை வழங்க கனடா முன்வந்துள்ளது. அமெரிக்கா 4 கோடி டாலர் அளிக்கும்.

## ரூ. 10 ஆயிரம் பிணையில் மோட்டார் காரை எடுத்துச்செல்ல அனுமதி

### புன்னலைக் கட்டுவன் திருட்டு வழக்கில் பொலிஸ் சார்ஜன்ட் சாட்சியம்

தெல்லிப்பழை, வியாழன்

புன்னலைக்கட்டுவனைச் சேர்ந்த சின்ன வி.வயித்திலிங்கம் என்பவருக்குச் சொந்தமான வீட்டிலிருந்து 1370 ரூபா பெறுமானமுள்ள நகைகளும், ரொக்கம் ரூபா 500 ம் திருடியதாகவும், திருடிய பொருள்களை வைத்திருந்ததாகவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வியனகே ராஜா, வல்லிபுரம் பொன்னுச்சாமி ஆகியோர்மீது சுன்னகம் பொலிசாரால் குற்றஞ் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திருட்டு சம்பந்தமாகப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டு கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ள மோட்டார் காரை உரியவர் ரூபா 10,000 பிணை செலுத்திக் கொண்டு செல்ல அனுமதியளித்தார்.

வழக்காளியான சின்ன விவைத்திலிங்கம் சாட்சியமளித்தபின் சுன்னகம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. வீரவாகு சாட்சியமளிக்கையில் கூறியதாவது.-

இந்தத் திருட்டு சம்பந்தமாக எனக்குக் கிடைத்த தகவலின்படி நான் யாழ்ப்பாணம் போய் அங்கு இத் தகவலை உறுதிப்படுத்திக்கொண்டு யாழ்ப்பாணத்திலுள்ள வல்லிபுரம் பொன்னுச்சாமி என்பவரின் வீட்டிற்குச் சென்று அவரிடம் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு அவரைக் கைது செய்து காருடன் சுன்னகம் வந்தேன். பின்பும் யாழ்ப்பாணம் போய் கரையூரில் உள்ள ஒரு பேக்கரியில் வைத்து முதலாம் எதிரியான வியனகே ராஜாவைக் கண்டு அவரிடம் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு அவருடன் சுன்னகம் வந்தேன். இங்கு அவரிடம் கார்ச்சாவியைக்கொடுக்க அவர் காரின் பின்புறத்திலுள்ள டிக்கியைத் திறந்து, அதனுள் இரு ஸ்குரு ஆணிகளைக் கழற்றினர். ஆணிகள் களன்றதும் சின்னஞ்சிறிய பெட்டியொன்று காணப்பட்டது. அப் பெட்டியினுள் வெள்ளைக் கைக்குட்டையில் நகைகள் சுற்றிவைக்கப்பட்டிருந்தன. வழக்காளி காணமற்போன நகைகளே என அடையாளம் காட்டினர். கைக்குட்டையிலிருந்த அடையாளக் குறியும், எதிரிகள் உடுத்தியிருந்த உடுப்புகளில் இருந்த அடையாளக்குறியும் ஒத்து இருந்தன. நீதிபதி மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

சுன்னகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலையின் உதவியுடன் திரு. என். தம்பிரத்தினத்தின் அநுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கை நடத்தினர். திரு. வி. செல்லத்துரையின் அநுசரணையுடன் திரு. டி கணேசலிங்கம் எதிரிகள் சார்பில் ஆஜரானர்.

## ஆற்றில் மிதந்துவந்த குழந்தையின் பிரேதம்

மாவிட்டபுரம், வியாழன்

ஓர் இனம் தெரியாத குழந்தையின் பிரேதமொன்று புதன்கிழமை காலை தொண்டமாறு ஆற்றில் மிதந்துவருகையில் கண்டெடுக்கப்பட்டது. மரண விசாரணையின்போது தொண்டமாறுற்றிலுள்ள நீர்பாசன இலாகாவைச்சேர்ந்த ஆர். கிட்டிணன் சாட்சியமளிக்கையில் புதன்கிழமை அதிகாலையில் தான் ஆற்றுக்குச் சென்றபோது குழந்தையின் பிரேதம் ஆற்றில் மிதக்கக்கண்டு பிரேதத்தைத் தாம் கரைக்குக் கொண்டுவந்ததாகவும் இது பற்றித் தாம் தனது மேலதிகாரிக்கு அறிவித்ததாகவும் கூறினர்.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எஸ். இராஜசூரியர் பிரேதபரிசோதனை நடத்தினர்.

மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் மரண விசாரணை நடத்தியபின் கே. கே. எஸ். பொலிசாரை இது சம்பந்தமாக மேற்கொண்டு புலன் விசரணை நடத்துமாறு உத்தரவிட்டார்.

குழந்தையின் உடம்பில் ஓர் அடையாளமும் காணப்படவில்லை. குழந்தை பிறந்து மூன்று அல்லது நான்கு நாட்கள்தான் இருக்கவேண்டுமெனவும் இது ஒரு கொலையாக இருக்கலாமெனவும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இதுவரை இதுசம்பந்தமாக யாரும் கைதுசெய்யப்படவில்லை.

## காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி இடமாற்றம்

### சிமெந்து தொழிற்சாலை விஸ்தரிப்பின் எதிரொலி

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் விஸ்தரிப்புத் திட்டத்தை முன்னிட்டு காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியை வேறோர் இடத்திற்கு மாற்றம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. ஆனல் எவ்விடத்திற்கு இவ்வாஸபத்திரியை மாற்றம் செய்வது என்பதுபற்றி சுகாதார அமைச்சு திட்டவட்ட முடிவெதையும் செய்ய முடியாதிருப்பதாகத் தெரிகிறது.

இந்த ஆஸ்பத்திரியைக் கசங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் ஓர் இடத்திற்கு மாற்றம் செய்யவேண்டும் என்றும் பட்டினசபை எல்லைக்குள் இல்லாத வேறோர் இடத்திற்கு மாற்றம் செய்யக்கூடாதென்றும் பட்டினசபைத் தலைவர் திரு. ஏ. இராசரத்தினம் சுகாதார சுப்ரிண்டனைக் கேட்டுள்ளார்.

நடேஸ்வராக் கல்லூரிக் கருகாமையில் 10 ஏக்கர் காணி இருக்கிறதென்றும், இக்காணி பஸ் நிலைய—புகையிரத நிலையங்களுக்கு மத்தியில் அமைந்திருப்பதால் இக்காணியில் அரசினர் ஆஸ்பத்திரியை அமைககவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

அல்லாவிடில் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியை மயிலிட்டி காசநோயாளர் ஆஸபத்திரிக்கு மாற்றும்படியும், காச நோயாளர் ஆஸ்பத்திரியை சேந்தாங் குளத்தில் அமைக்கும்படியும் அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

---

### மேற்கு ஜெர்மனியில் பெண் மந்திரி

போன், நவ. 15

மேற்கு ஜெர்மன் சரித்திரத்திலேயே முதல்தடவையாக இந்தமுறை ஒரு பெண் மந்திரியாக நியமிக்கப்படவிருக்கிறர். டாக்டர் எலிஸபெத் இச்வாஷாப்ட் என்பவரே நியமிக்கப்படவிருக்கும் மந்திரி.

## மணி வாக்கு

ஒவ்வொருவருடைய உள்ளியல்புக்கு ஏற்ப நம்பிக்கை அமைகிறது. ஒருமனிதன் எப்பொருளில் நம்பிக்கை உடையவனே, அவன் அப்பொருளே ஆகிவிடுகிறன்.

— பகவத்கீதை


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ 3உ (18-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## யாழ்ப்பாண வீதிகள்

யாழ்ப்பாண வீதிகளின் அவலநிலைபற்றி நேற்று ஒரு செய்தி வெளியாயிற்று. தெருக்களின் பராமரிப்புக்கான பொறுப்புள்ள மாநகரசபையும், மராமத்து இலாகாவும் விசேஷ கவனம் செலுத்தி, பழுதுபார்த்து பொதுமக்களின் சங்கடங்களைக் குறைக்கக் கடமைப்பட்டிருக்கின்றன.

மிகவேகமாக ஜனத்தொகையிலும் போக்குவரத்திலும் வளர்ந்துவரும் யாழ்ப்பாண நகரத்திலே, தெருக்களில் பலவும் குறுகலாகவுள்ளன. இதனால் போக்குவரத்துக்கு மிகவும் வசதியீனம் ஏற்பட்டுள்ளது. தெருக்களில் நடந்து செல்வோர்கள் பத்திரமாக வீடு வந்து சேருவார்களா என்று கவலைப்பட வேண்டியுள்ளது. இலங்கையிலேயே கொழும்புக்கு அடுத்தபடி பெரிய நகரமான யாழ்ப்பாணத்தில், முக்கிய தெருக்களையாவது கூடுமானவரை விசாலப்படுத்தக் கூடுமான நடவடிக்கை எடுக்க வேண்டியதவசியமாகும். இதற்குப் பணச்செலவு அதிகமாகுமென்று அசிரத்தையுடன் இருப்பதற்கில்லை. தலைநகரிலே பெரும் பணச் செலவில் பல வீதிகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே யாழ்ப்பாணத்திலும் இவ்வித அபிவிருத்தியைச் செய்ய பணம் ஒரு தடையாக இருக்க முடியாது.

இதற்கிடையே தெருக்களை போக்குவரத்துக்கும், மக்கள் நடந்து செல்வதற்கும் அதிக வசதிப்படுத்த மாநகரசபையும், மராமத்து இலாகாவும் பல காரியங்களைச் செய்யலாம். இது மழைகாலமானதால், தெருக் குழிகளிலே தண்ணீரும் சேறும் அதிகம் தேங்கி, பாதாசாரிகக்கு அதிக சங்கடமளிக்கின்றது. விரைந்து செல்லும் மோட்டார்கள் மக்கள்மீது சேற்றுத் தண்ணீரை அடிக்கின்றது மக்கள் ஒதுங்கவும், தெரு போதிய அகலமானதாக இல்லையாதலால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் உடன் கவனம் செலுத்தி, தெருக்களிலுள்ள குழிகளை மூடி, செப்பனிட வேண்டியது அவசர வேலையாகும்.

பல ரஸ்தாக்களில் மின்சார வெளிச்சம் சரிவர இல்லை என்றும், பலவிளக்குகள் எரிவதில்லை என்றும் இதனால் இரவில்நடந்துசெல்லுபவர்களுக்கு அதிக தொல்லையாக இருப்பதாகவும் புகார்கள் கிடைக்கின்றன. தெரு விளக்குகள் நகருக்கு லட்சணமாவதுடன், இரவில் நடந்து செல்வோருக்கு மிகவும் துணையாகவுமிருப்பதால், பொது மக்களின் நன்மையை முன்னிட்டு இக்குறையும் தாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும். இத்திருத்தங்களைச் செய்ய பணச்செலவு அதிகமேற்படுவதற்கில்லை. ஆதலால், உடனடியாக இது நிறைவேற்றப்படுமென்றே நம்புகிறோம்.

# கதிர்காம மடங்களை அகற்றுவது முறையல்ல!

## அரசாங்கத்துக்கு இந்து சமய சங்கம் வேண்டுகோள்

கட்டுவன், வியாழன்

கதிர்காம மடங்களை அகற்ற வேண்டாமென்று இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று கட்டுவன் மயிலிட்டி தெற்கு வர்த்தலைவிளான் இந்து சமயவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது.

இத்தீர்மானத்தின் நகல் பிரதம மந்திரிக்கும் ஸ்தலஸ்தாபன மந்திரி, நகரநிர்மாணப் பகுதி அதிபர், காங்கேசன்துறை எம். பி. ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

"இலங்கை வாழ் இந்துக்களால் பல ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு செவ்வனே பரிபாலித்துவரும் புனித மடங்களையும் அவற்றோடு தொடர்புடைய ஆலயங்களையும் மாணிக்க கங்கைக்கு அப்பால் மாற்றவிருக்கும் இலங்கை அரசாங்கத்தின் யோசனையை இச்சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. சுவாமி வீதிவலம் வரும்போது மடங்களில் நடந்து வரும் பூசைகளுக்கும் உபசரணைகளுக்கும் தடையாயிருக்கும் சைவமக்களின் பண்டு தொட்ட சுவாமி வழிபாட்டுக்கு குந்தகம் விளைக்கும் இச்செயல் இந்துக்களின் மனதைப் புண்படுத்தும் ஜனநாயகத்துக்கு முரணனதும் இந்து மக்களின் சமய வழிபாட்டில் அரசினர் தலையிடுவதாகவும் கருதப்படும். இந்துக்களின் கொள்கைப்படி, மடங்கள் கோவில்களின் அம்சங்களாகக் கருதப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலுள்ள சகல கோயில்களிலும் அண்மையில் பல மடங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இம்மடங்களில் சமையபோதனை செய்யும் மகான்கள் தங்கியிருந்து சமயத்தொண்டு செய்கிறார்கள். ஆகவே அக்காரணம் பற்றியும், கதிர்காமத்திலுள்ள புனிதமடங்களை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டாமென இச்சங்கம் இலங்கை அரசாங்கத்தை வேண்டிக்கொள்கிறது.

## ரூ. 500 பிணையில் செல்ல அனுமதி

தெல்லிப்பழை, வியாழன்

சுன்னாகம் பொலிஸ் நிலையசப் இன்ஸ்பெக்டர் திரு. டி. ஜே. ஏ. கலன்சூரியா தலைமையிற் சென்ற பொலிஸ் கோஷ்டி ஊரெழுவைச் சேர்ந்த சின்னக்குட்டி இளையகுட்டி என்பவரைச் சட்டவிரோதமாகச் சாராயம் தயாரிக்கையில் பிடித்ததாகவும் சாராயம் தயாரிக்க உபயோகிக்கப்பட்ட உபகரணங்கள், கோடா நிறைக்கப்பட்ட சாடிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிகிறது.

எதிரி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி எதிரியை அழைத்த நேரத்தில் கோர்ட்டில் ஆஜராக வேண்டுமெனவும் ரூபா 500 பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார்.

## பிரயாணிகள் தங்குமிடமில்லை!

திருக்கோணமலை, வியாழன்

திருக்கோணமலை பஸ் நிலையத்தில் தங்குமிடமின்மையால் திருமலைக்கு அணித்தாயுள்ள கிராமங்களிலிருந்து பட்டினத்துக்கு வரும் பிரயாணிகள் கஷ்டமடைகின்றனர். தங்குமிடம் ஒன்று அமைத்துத் தரும்படி பொது மக்கள் கோரிக்கைகள் பல அனுப்பியும், திருமலை நகரசபையில் தீர்மானம் நிறைவேறியும் கூட, இன்னும் தங்குமிடம் அமைக்கப்படவில்லை.

## சிமிந்துதொழிற்சாலையில் திருடியதாக வழக்கு

தெல்லிப்பழை, வெள்ளி

காங்கேசன்துறைச் சிமிந்துத் தொழிற் சாலையிலிருந்து 300 ரூபாய் பெறுமதியான டயரைத் திருடியதாக வீ. ரத்னசிங்கம், பி. கணேசு ஆகியோர் மீது காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீண்டும் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. கனகராஜன் குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மனேச்சர் செல்லையா சபாரத்தினம், கையெழுத்து நிபுணர் டி. நாகேந்திரம் ஆகியோர் சாட்சியமளித்த பின்னர் நீதிபதி வழக்கை அடுத்த மாதம் 9-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## கல்லோயாப்பள்ளத்தாக்கில் மாந்தோட்டப் பண்ணை

அக்கரைப்பற்று, வெள்ளி

கல்லோயாப் பள்ளத்தாக்கின் இடதுபுறப் பிரதேசத்திலுள்ள உயர்ந்த நிலத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பிரமாண்டமான நவீன மாந்தோட்டப் பண்ணையை அமைப்பதற்கு கல்லோயா அபிவிருத்திச்சபை முடிவுசெய்துள்ளது. மாம்பழங்களைத் தகரங்களில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று அம்பாரையில் நிறுவும் யோசனையின் பேரில்தான் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இப்பண்ணை அமைக்கப்படுகின்றதெனத் தெரிகிறது.

## குறைந்த விலையில் உணவுப்பொருள்

கொழும்பு, வெள்ளி

மிகக் குறைந்த விலையில் எந்த நாட்டிலிருந்தும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அரசாங்கம் இறக்குமதி செய்வதற்கு உதவிபுரியும் பொருட்டு வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவர்களுடன் உணவு அமைச்சு தொடர்பு கொண்டுள்ளது.

இரத்தினக் கம்பளம்

# ஓரே குழப்பம்!

பதுமன்

குழப்பம்! குழப்பம்!! குழப்பம்!!! கல்வி உலகில் ஓரே குழப்பம். பார்லிமெண்டிலும் கல்விக் குழப்பம் பற்றிய பேச்சுத்தான். செனட் சபையிலும் கண்டனக் குரல் கேட்கின்றது. நாடெங்கணும் பெற்றோரும் ஆசிரியர்களும் இந்தக் குழப்பத்தைப் பற்றியே பேசிப் பேசி மேலும் குழப்பமடைகின்றனர். எந்தப் புத்தகங்களை வாங்குவதென்று மாணவர்களிடையேயும் குழப்பந்தான். இந்தக் குழப்பத்தால் அவர்களின் மூளைகளே கலங்கிவிடும் போலிருக்கின்றது. இம்மாதிரியான ஒரு குழப்பநிலை முன்னர் ஒருபோதும் இருந்ததில்லை. இத்தனைக்கும் மேலாகத் தேசியக் கல்விக் கமிஷனின் இடைக்கால அறிக்கை புதிய சிக்கல்களை உண்டாக்கிவிட்டிருக்கின்றது.

ஆசிரியர்களில் அநேகர் தேசியக் கல்வித்திட்டத்தை வரவேற்பதாயிருந்தாலும் ஆசிரியர்களின் அரசியல் உரிமைகளும் பெரிய குழப்பத்தையே உண்டாக்கி யுளளன. நாட்டின் விருத்திக்கு அடிப்படையான கல்வித் திட்டமே இவ்வளவு தில்லுமுல்லுகளை உண்டாக்குமாயின் நாடு உருப்பட்டாற் போலத்தான்! தண்ணீரும் கலங்கித்தான் தெளிய வேண்டுமென்பார்கள். புயலுக்குப் பின் அமைதி ஏற்படுவதும் இயற்கையே. இந்த மாதிரி ஆறுதல் சொல்லிக் கொண்டிருப்பதற்குத் தானும் எதிர்காலம் அவ்வளவு நம்பிக்கை ஊட்டுவதாயில்லையே.

### 'இலங்கையர் கோன்'

இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழு நடாத்திய நாடகப் போட்டியில் வெற்றியடைந்துள்ளவர்களை எண்ணி மகிழ்ந்து கொண்டிருக்கையில் தமிழ் நாடககங்ள் எழுதித் தமக்கென ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுக்கொண்ட ஈழத்துப் பிரபல சிறுகதை எழுத்தாளர் 'இலங்கையர் கோன்' எனும் திரு. என். சிவஞான சுந்தரத்தின் திடீர் மரணம் சொல்லொணுக் கவலையை உண்டாக்கியிருக்கின்றது.

காரியாதிகாரியாகப் பணியாற்றி வந்த அன்பர் திரு. சிவஞானசுந்தரம் இளம் வயதிலேயே தமிழ் இலக்கியத்தை மிகுந்த ஆர்வத்துடன் பயின்று வந்ததுடன் ஓய்வு நேரங்களில் இனிய கட்டுரைகளையும் அற்புதமான சிறு கதைகளையும் எழுதிவந்தார். தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் தமது பெயரை நிலைநாட்டியுள்ள 'இலங்கையர்கோன்' கலைவிமர்சகராக விளங்கியது டன் பல நாடகங்களையும் எழுதி உதவியுள்ளார். கொட்டகைக் கூத்துக்கள் அருகி வரும் இத்நாட்களில் அவற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் பணியிலும் இலக்கிய நண்பர்களுடன் உழைத்துவந்தார்.

ஈழத்திலே சிறுகதை இலக்கியம் இன்று சிறப்புற்று வளர்ந்துவருவதற்கு வித்திட்ட எழுத்தாளர்களில் 'இலங்கையர்கோன்' மிக முக்கியமானவர். பழைய இலக்கியங்களின் வளமும் அழகும் அவருடைய எழுத்துக்களில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

ஆங்கில இலக்கியத்தில் ஈடுபாடுள்ள இப்பெரியாரின் சிறுகதைகள் இலங்கையிலுள்ள ஆங்கிலப் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன.

பழமையின் சிறப்புகளை நன்கு அறிந்த 'இலங்கையர் கோன்' புதுமையையும் அளவாகக் கையாண்டு தமிழ் மொழியை வளமாக்கினர்.

வழக்கறிஞர் பரீட்சையிற் சித்தி எய்தி, காரியாதிகாரியாகப் பதவி வகித்து, தமிழ் வளர்ச்சியிலும் கலை வளர்ச்சியிலும் ஈடுபட்டு உழைத்தார்.

### 'விதானையார் வீட்டில்'

'விதானையார் வீட்டில்'என்ற ரேடியோ தொடர் நாடகத்தை எழுதி வானொலி ரசிகர்களின் அமோகமான பாராட்டைப் பெற்ற 'இலங்கையர்கோன்' அதில் அற்புதமான பாத்திரங்களைச் சிருஷ்டித்திருந்தார். அவை யாவும் சாகாவரம் பெற்ற சிருஷ்டிகள். கிராமியப் பேச்சு நடையை இந்நாடகங்களில் அவர் லாவகமாகக் கையாண்டிருந்தார். விதானையார் குடும்பத்தையும் இலங்கையர் கோனையும் யார்தான்மறப்பார்கள்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலுள்ள இலங்கை பல்கலைக் கழகத்தின் இந்து மாணவர் சங்கத்தார் இம்முறை வெளியிட்டுள்ள "சிவநெறி" என்ற அழகிய மலரைக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன்.

இக்காலத்தில் விஞ்ஞான மாணவர்களுக்கு பொதுவாக தெய்வ நம்பிக்கை இராதென்றும் அவர்களில் பலர் நாத்திகரென்றும் ஒருகருத்துண்டு. அது எவ்வளவு தவறானதென்பதை இம் மலர் நிரூபிக்கின்றது.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரி சுவாமிகள் அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில் பேரின்பமடைய வழி காட்டுகின்றார். "அன்பு நெறியே சிவநெறி" என்று சரியாக அறிவுறுத்துகின்றார் விஞ்ஞான பேராசிரியர் மயில்வாகனம்.

எல்லாச் சமயங்களும் அன்பையே வற்புறுத்துகின்றன. ஆனல் நம்மில் பலர் இதை அடியோடு மறந்து விடுகிறோம். அல்லது நமது மதத்தவரிடம் மட்டும் அன்பு காட்டி மற்றவர்களை வேற்றுவராக ஒதுக்க முற்படுகிறோம்.

இன்றைய சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமய சங்கடங்களுக்கெல்லாம், நாம் அன்புக்குப் போடும், இந்த அடைக்கும் தாளே காரணம் அல்லவா?

பல அரியகட்டுரைகள் இதை வாடா மலராக்கியுள்ளன. இதில் ஒரு விசேஷம், வர்த்தகப் பெருமக்களின் ஆதரவு விளம்பர மூலம் அமோகமாக கிடைத்து, இம் மலர் லாபகரமாக வெளியிடப்பட்டிருப்பதாகும்.

இலங்கை சர்வகலாசாலை கொழும்பு இந்து மாணவர்கள் இவ்வளவு சிறப்பாக இம் மலரை வெளியிட்டமைக்காக அவர்களைப் பாராட்ட வேண்டும். இதிலடங்கிய அறிவுரைகளின் படி சில மாணவரின் வாழ்க்கையாவது அமையுமாயின், இம்மலர் வெளியானதால் மேலான பயன்கிடைப்பதாயிருக்கும்.

* * *

"வெண்ணீறணிந்த தென்ன? வேலைப் பிடித்ததென்ன? கண்மூடி நின்றதென்ன? காவிவுடுத்ததென்ன?"...... இந்த தெய்வீக கானத்தை நேற்று காலை இலங்கை வானெலியில் கேட்டதும், கே. பி. எஸ். இங்கு வருவது உடன் ஞாபகம் வந்தது. அவர் வருவதை முன்னிட்டுத்தானே என்னவோ இலங்கை வானொலி, கே. பி. எஸ்.ஸின் பல பாடல்களையும் ஒலிபரப்பினர்களோ என்னவோ! எப்படியும் இது மிகவும் பொருத்தமாக இருந்தது.

சில பாட்டுக்களை ஒரு சில தடவை கேட்டால் காது புளித்துவிடும். பல பாட்டுகள் இப்படி மறைந்து போய்விட்டன. ஆனல் கே. பி. எஸ்.ஸின் பாடல்களை எவ்வளவு முறை கேட்டாலும் தெவிட்டுகிறதா?

நீர்வேலி பிள்ளையார் கோவில் கட்ட உதவுவதற்காக அவர் இங்கு வந்து இன்று பாடுகிறார். அவரது பாட்டைக் கேட்க இங்கு லட்சக்கணக்கானவர்கள் ஆவலுடனிருக்கிறார்கள். ஆனல் நகர மண்டபத்தில் சில நூறு பேர்களுக்குத்தான் அதைக் கேட்டு இன்புற வாய்ப்புக் கிடைக்கும்.

ஒலிபெருக்கி வைத்து, வெளியிலுள்ளவர்களும் கேட்டு இன்புற ஒழுங்கு செய்தால் உபகாரமாக இருக்கும். அல்லது ஒலிப்பதிவு செய்து வானொலியில் அஞ்சல் செய்யலாம். கே. பி. எஸ். ஸின் இசை ஒரு சிலருக்கு மட்டுமன்றி, எல்லாருக்கும் பொதுச் செல்வமாகுமல்லவா?

* * *

(5-ம் பக்கம் பார்க்க)

# நேரு-நாசர்-டிட்டோ இன்று சந்திப்பு

## ‘படை குறைப்பு இல்லையேல் அணு ஆயுத யுத்தம்தான்’

கெய்ரோ, நவ. 17

பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு, யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ, ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் கேணல் நாசர் ஆகிய மூன்று தலைவர்களும் நாளை சனிக்கிழமை மாலை கெய்ரோவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர்.

அரபுக் குடியரசு ஜனதிபதி நாசரின் அழைப்பின் பேரிலேயே இச்சந்திப்பு நடைபெறவிருக்கிறது. சென்ற செப்டம்பர் மாதம் பெல்கிரேடில் நடைபெற்ற நடுநிலைமை நாடுகளின் தலைவர்களின் மகாநாட்டின் பின் நாளை மாலை முதல் தடவையாக சந்தித்துப் பேசவிருக்கும் முத்தலைவர்களும் மீண்டும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சந்தித்துப் பேசுவர்.

யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ கேணல் நாஸரின் அழைப்பை ஏற்று இன்று கெய்ரோ வந்து சேருகிறார்.

### படை குறைப்பு இல்லையேல் போர்

நேற்று பிரதமர் ஸ்ரீ நேரு மெக்ஸிக்கோவில் பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் பேசுகையில் உலகில் பூரண படைகுறைப்பு இல்லையேல் அணுஆயுத யுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்றார்.

அணு ஆயுத பரிசோதனைகளைத் தடை செய்வதற்கு உருவான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியதவசியமென்று அவர் கூறினர்.

ஜெர்மனி-பெர்லின் பிரச்சினை பற்றி ஸ்ரீ நேரு குறிப்பிடுகையில் சம்பந்தப்பட்ட அரசுகளுக்கிடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படத்தான் வேண்டுமென்றார்.

ஒரு நிருபரின் கேள்வியொன்றுக்கு பிரதமர் நேரு பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினர்:

எந்த அரசுக்கும் பாரதம் சார்பு காட்டி நடந்துகொள்வதில்லை. ரஷ்யா சரியான முறையில் நடந்துகொண்டால் அதை இந்தியா பாராட்டும். அதே போல் வேறு எந்த நாடுகளும் சரியான முறையில் நடந்துகொண்டால் இந்தியா பாராட்டத்தான் செய்யும். உலக நாடுகளுக்கிடையில் நல்லுணர்வையும் நல்லுறவையும் ஏற்படுத்துவதுதான் இந்தியாவின் இலட்சியம்.

கோவா பிரச்சினை பற்றி ஸ்ரீ நேரு குறிப்பிடுகையில், கோவா பிரச்சினையை அமைதியான வழியிலேயே தீர்த்துக்கொள்ள பாரதம் விரும்புகிறது என்றார். “வேறு வழிகளில் கோவா பிரச்சினையைத் தீர்க்க விரும்பினல் மூன்றேநாட்களில் தீர்த்துவிடமுடியும். கோவாவில் மக்கள் சித்திரவதை செய்யப்படுவதை அறிந்து பாரத மக்கள் கொதிப்படைந்துள்ளனர். பாரத அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அவர்கள் கோருகின்றனர். இக்கோரிக்கை வலுத்தால் இதர நடவடிக்கைகள் பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யும்” என்று ஸ்ரீ நேரு சொன்னர்.

---

## தாகூர் இல்லத்தில் பிரதமர் இக்கேடா

கல்கத்தா, நவ. 17

நேற்று கல்கத்தா வந்து சேர்ந்த ஜப்பானிய பிரதமர் திரு. இக்கேடாவும், அவரது குழுவினரும் விமான நிலையத்திலிருந்து கவிதாகூரின் பூர்வீக இல்லத்துக்குச் சென்று பார்வையிட்டனர். அவர்களுடன் மேற்கு வங்காள முதன் மந்திரி டாக்டர் பி. ஸி. ராயும் சென்றார்.

கல்கத்தாவிலுள்ள ஜப்பானியர்கள் திரு. இக்கேடாவுக்கு நேற்று ஒரு வரவேற்புபசாரம் அளித்தனர்.

---

## ‘கலை மூலம் புதிய மலர்ச்சி ஏற்பட வேண்டும்’

பண்டத்தரிப்பு, வெள்ளி

கலையைக் கொண்டு வாழ்வு நடத்தும் ஒரு சகாப்தத்தை விரைவில் உண்டாக்க வேண்டுமென்றும் அதன் மூலமாகச் சமுதாயத்தில் புதிய மலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென டாக்டர் அ. வை. தங்கக் கணபதி ஈழத்து இளம் இளைஞர் இயக்கத்தினர் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார். இக்கூட்டம் கழகத்தினர் காரியாலயத்தில் நடைபெற்றது. திருமதி தர்மபாலன், திரு. கே. பரஞ்சோதி, திரு. க. செல்வரத்தினம் ஆகியோரும் பேசினர்.

---

# 13 விமானிகளின் கொலைக்குக் காரணமானவர்

## உரிய தண்டனைபெற ஐ. நா. நடவடிக்கை

### அடௌலாவுக்கு எச்சரிக்கை

நியூயோர்க், நவ 17

காங்கோவில் கீவுமாகாணத்திலுள்ள கிண்டு என்ற இடத்தில் காங்கோலியத் துருப்புக்களால் வெட்டிக் கொலைசெய்யப்பட்ட ஐ. நா. படையைச் சேர்ந்த 13 இத்தாலிய விமானப்படையினரின் கொலைக்குக் காரணமாக இருந்தவர்களுக்கு உரிய தண்டனை அளிக்குமாறு காங்கோவிலுள்ள ஐ. நா. படைத் தளபதிக்கு ஐ.நா.வின் தற்காலிக தலைமைக் காரியதரிசி யூ. தாண்ட் கட்டளையிட்டுள்ளார்.

கிண்டுவிலுள்ள காங்கோலியத் துருப்புக்களை நிராயுதபாணிகளாக்கும்படி காங்கோ மத்திய அரசாங்கத்தின் பிரதமர் அடௌலாவை காங்கோவிலுள்ள ஐ. நா. பிரதிநிதி கேட்டுள்ளார்.

காங்கோலிய துருப்புக்களை நிராயுதபாணிகளாக்ககாங்கோ மத்திய அரசாங்கம் தவறினல் அந்த வேலையை ஐ. நா. படைகளே செய்யவேண்டி நேரிடுமென்று ஐ. நா. பிரதிநிதி திரு. அடௌலாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிண்டுவில் காங்கோலியத் துருப்புக்களின் அட்டகாசத்தை அடக்கவும் அமைதியை நிலைநாட்டுவதற்குமாக மேலும் பல மலாயாத் துருப்புக்கள் காங்கோவுக்கு விமானத்தில் அனுப்பப்பட்டுவருகின்றன.

கிண்டுவில் நிலைமை பரபரப்பாகவும் பீதிநிறைந்ததாகவுமுள்ளதாகக் கூறப்படுகிறது

---

# ‘சமயமும் விஞ்ஞானமும் இணைந்து வளரவேண்டும்’

## கிழக்கிலங்கை தமிழாசிரியர் கூட்டத்தில் பேச்சு

திருக்கோணமலை, வியாழன்

கிழக்கிலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் திருமலைக் கிளையின் வருடாந்தக்கூட்டம் சமீபத்தில் கிளைத்தலைவர் திரு. வ. சி. பு. சுபிரியன் பெர்னண்டோ தலைமையில் நடைபெற்றது.

“ஆசிரியர்கள் கல்விப்பகுதியினருடன் ஒத்துழைத்தால்தான் கல்வி வளர்ச்சியில் இலங்கை முன்னேற்றமடையும். இவ்வொத்துழைப்பு ஆசிரியர்களுக்குமட்டுமன்றி மாணவர்களுக்கும் பொறுப்புணர்ச்சியையூட்டும். இவ்விருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சி பெருகுகின்றனவே தவிர சமய வளர்ச்சி பெருகவில்லை. மாணவர்களிடையே ஒழுக்கத்துடன் கலாசாரம், பண்பும் காணப்படவேண்டுமானல் சமய வளர்ச்சியும் விஞ்ஞான வளர்ச்சியும் இணைந்து வளரவேண்டும். சுயதேவையைப் பூர்த்திசெய்யும் நாடுகளெல்லாம் தொழிற் கல்விக்கு முக்கியமளிக்கும் நாடாவே திகழ்கின்றன” எனத் திருமலைப் பாடசாலை இன்ஸ்பெக்டர் ஜே. ஏ. என். அருமைநாயகம் பேசுகையில் கூறினர்.

ஆசிரியமணி ஈ. எம். கனகசபை பேசுகையில், சேமலாப நிதிச் சங்கத்தில் ஆசிரியர்களனைவரும் சேரவேண்டியது அவசியமென்றார்.

பண்டிதர் ஆர். வடிவேலு பேசுகையில், ஆசிரியர் சேமலாபநிதிச் சங்கம் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து செயலாற்றவேண்டுமென்றார்.

---

## யாழ்ப்பாணம்—நுவரெலியா உதைபந்தாட்டம்

இம்மாதம் 26ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இலங்கை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளுக்கான ஆட்டங்களில் நுவரெலியா கோஷ்டிக்கும் யாழ்ப்பாணக் கோஷ்டிக்கும் இடையே உதைபந்தாட்டம் யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெறுமெனத் தெரியவருகின்றது.

---

## தெமட்டக்கொடையில் கலை விழா

தெமட்டக்கொடை, வெள்ளி

தெமட்டக்கொடை அரசினர் தமிழ் உயர் நிலை பள்ளிக்கூடத்தில் கலை விழா 19-11-61 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு நடைபெறும்.

பொருட்காட்சி, இயல் அரங்கு, இசை அரங்கு, நாடக அரங்கு என்பன ஏற்பாடாகியுள்ளன.

---

## கிராமசபை வரவு செலவுத் திட்டம்

காத்தான்குடி, வெள்ளி

மண்முனை வடகிழக்கு வடபகுதிக் கிராமசபையின் வரவு செலவுத் திட்டம் ஒரு அதிகப்படியான வாக்கால் நிறைவேறியது. சபைத் தலைவர் திரு. க. செல்லத்தம்பி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

---

# ‘சிவானந்த வித்தியாலயத்தை அகிலஇலங்கைபாடசாலையாக்குக’

## கல்விமந்திரியிடம் கோரிக்கை

காத்தான்குடி, வெள்ளி

“இப்பகுதியில் குறிப்பாக மட்டக்களப்பில் எத்தனையோ முதலாந்தரப் பாடசாலைகள் இருந்தும் ஒன்ருவது அகில இலங்கைப் பாடசாலையின் தரத்துக்கு உயர்த்தப்படவில்லை. இதனல் இப்பகுதி மாணவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களை நாடிச் செல்ல வேண்டியுள்ளது. கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயமோ சகல வசதிகளையும் பெற்றுள்ள ஓர் சிறந்த பாடசாலையாக இருப்பதனல் இப்பகுதி மாணவர்களின் நலன் கருதி அதனை அகில இலங்கைப் பாடசாலையின் தரத்துக்கு உயர்த்தி உதவுக”

இவ்வாறு கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று சிவானந்த வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது. கூட்டத்துக்குத் தலைவர் திரு. கே. கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார்.

---

### யாழ்ப்பாண பாடசாலைகள் உதைபந்தாட்டம்

# இறுதிபோட்டி மீண்டும் நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண பாடசாலைகள் உதைபந்தாட்டம் முதலாம் கோஷ்டி ‘பி’ பிரிவிவுக்கான இறுதியாட்டம் மீண்டும் நடைபெற்ற பின்னரே முடிவு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்க உதைபந்தாட்ட உபகுழு தீர்மானித்திருக்கின்றது. இம் மாதம் 10-ந் திகதி யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கும், வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரிக்கும் இடையே நிகழ்ந்த இறுதியாட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது நினைவிருக்கலாம்.

முதலாம் கோஷ்டி ‘ஏ’ பிரிவைச் சேர்ந்த முதலாம் குழுவைச் சேர்ந்த கோஷ்டிகளிலிருந்தும் இரண்டாம் குழுவைச் சேர்ந்த கோஷ்டிகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட இரு கோஷ்டிகளுக்கும் இடையே ஒரு ஆட்டத்தை ஒழுங்கு செய்து நடத்தி அதே தினத்தில் பாடசாலைகள் முதலாம், இரண்டாம் கோஷ்டி உதைபந்தாட்ட சம்பியன்ஸுக்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்குவது என்றும் தீர்மானித்துள்ளனர். முதலாவது கோஷ்டி ‘ஏ’ பிரிவு சம்பியன்ஸாக வெற்றிபெற்றுள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு எல். கே. எஸ். தங்கமாளிகை வெற்றிக் கிண்ணமும் இரண்டாம் கோஷ்டி சம்பியன்ஸாக வெற்றிபெற்றுள்ள தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் மேற்படி ஸ்தாபனத்தாரினல் வழங்கப்படும் இன்னெரு வெற்றிக் கிண்ணமும் பரிசாக அளிக்கப்படும் என அறியப்படுகிறது.

---

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஜிந்துப்பிட்டி எனும் ஜயந்தி நகர் கோவிலில், அமைந்துள்ள புதிய யாத்திரிகர் விடுதி மண்டபத் திறப்பு விழா அழைப்பிதழ் வரப்பெற்றேன். கோவிலின் இப்புதிய மண்டபமும், யாத்திரிகர் விடுதியும், கொழும்பின் பெரும் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. 13 ஆண்டுகளுக்குமுன் கூட்டுப் பிரார்த்தனை இக்கோவிலில் ஆரம்பமாகி தொடர்ந்து நடந்துவருவதின் பயன்தானே, இக்கோவிலின் சேவையும் புகழும் வளர்ந்தோங்கி, மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும் பொலிகின்றது.

---

## 5000 பாதுகாப்பான போத்தல் விளக்குகள்

கொழும்பு, வியாழன்

பாதுகாப்பான போத்தல் விளக்குகள் ஐயாயிரத்தை கைத்தொழில் இலாகா மிகச் சொற்ப செலவுடன் செய்துள்ளது. சுகாதார இலாகா கேட்டிருந்ததன் பேரில் கைத்தொழில் இலாகா பாதுகாப்பான இப்போத்தல் விளக்குகளைச் செய்துள்ளது. இவ்விளக்குகளை விநியோகிக்கும் பொறுப்பை சுகாதார இலாகாவே ஏற்றிருந்தது. விளக்குகள் தயாராக்கப்பட்டு 2 வாரங்களாகின்றன. ஆனல் சுகாதார இலாகா இன்னும் அவற்றை விநியோகஞ் செய்யவில்லை. விளக்கு ஒன்றுக்கு 23 சதம் மட்டும் செலவிடப்பெற்றுத் தயாரிக்கப்பட்ட 5,000 விளக்குகளும் கைத்தொழில் இலாகாவின் ‘ஸ்டோர்ஸ்’ ஸிலேயே கிடக்கின்றன.

---

## தேசிய அபிவிருத்தி வரிக்கு

### ஐக்கிய முன்னணி எதிர்ப்பு

அம்பாறை, வியாழன்

கல்லோயாப் பள்ளத்தாக்குத் தொழிற்சங்கத்தின் ஐக்கிய முன்னணி அண்மையில் கூடிய சட்டமொன்றில் தேசிய அபிவிருத்தி வரிக்கு எதிர்ப்புக் காட்டுமுகமாக அரசாங்க சேவைக் குழுவினர் எடுக்கவிருக்கும் நடவடிக்கை எல்லாவற்றுக்கும் தாம் ஒத்துழைப்பது எனத் தீர்மானிக்கப் பட்டது.

அவசரகாலச் சட்டத்தை வாபஸ் செய்யும் படியும் நியாயமற்ற வரிகள் அனைத்தையும் வாபஸ் செய்யும்படியும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது எனவும் கல்லோயாத் தொழிற்சங்க முன்னணி தீர்மானித்துள்ளது.

கல்லோயாவில் கடமையாற்றி வரும் த்தொழிலாளிகள் அத்தனை பேருக்கும் தொழிற் பாதுகாப்பும் பென்ஷன் உரிமையும் வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

---

## சிவாலய புனருத்தாரணம் முடிவடைந்தது

தெல்லிப்பழை, வியாழன்

வடஇலங்கையில் புராதனப் பெருமை வாய்ந்த கீரிமலை திருத்தம்பலேச்சுர சிவனின் ஆலயம் புதிதாகப் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. திருத்தம்பலேச்சுர ஆலய சீர்திருத்தக் கமிட்டி வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை தலைமையில் சிறப்பான முறையில் இயங்கி இவ்வாலயத்தை அழகுபெறஅமைத்துள்ளது.




# செயல் வீரன் நேரு



இந்தியப் பிரதமர் நேருவின் 72-வது பிறந்ததின விழா சென்ற செவ்வாய்க்கிழமை கொண்டாடப் பெற்றது. இந்தியா எங்கிலும் நேருவின் பிறந்த தினம் குழந்தைகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. நேருஜியின் சகோதரி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதியை மாணாக்கன் எஸ். ஜனகன் இப்பகுதியில் வெளியிடுவதற்காக அனுப்பியிருக்கின்றார்.

ஜவஹர்லால் அருமையான மனிதர். நல்லுணவு கிடைப்பது எவ்வளவு அருமையோ அவ்வளவு இவரும் அருமையானவர் என்று பிரான்ஸிஸ் ஜான் கந்தர் குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமானது. நவயுகம் படைத்த பெரிய மனிதர்களில் இவர் ஒருவர். உலகெங்கும் முள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்ற வீரன். ஜனநாயகக் கொள்கையை விடாப்பிடியாகக் கொண்டவர். உயர்ந்த நோக்கங்கள் நிரம்பிய இவ்வீரனை மக்கள் போற்றி வணங்குகின்றனர்.

காந்திஜிக்கு அடுத்தபடியாக நாடெங்கணும் தன்னைப்பற்றி கதை கதையாகப் பேசும்படியான அற்புதமான ஒரே மனிதர்.

அவர் ஒரு செயல் வீரன். வெயில் ஒளியையும் மலைகளையும் விரும்புபவர். சிறைச்சாலையில் அநேக ஆண்டுகள் வாழ்ந்தவர்.

வாழ்வும் அன்பும் சிரிப்பும் அவருடைய உயிரோடு ஒட்டியவை. ஆனால் அவை அவரைச் சூழ்ந்திருக்கும் உயர்ந்த சுவர்களைத் தாண்டி உள்ளே அணுகா. இந்தக் கஷ்டங்களால் அவருடைய உணர்ச்சியைத் தணித்துவிட முடியாது. எல்லையற்ற காட்சியை அவர் கண்டிருக்கிறார். கஷ்டமோ, சிறைவாசமோ அக்காட்சியை அவர் இழக்கும்படி செய்ய முடியாது அவருக்கு அந்த எல்லையற்ற காட்சியைக் காட்டிலும் சுதந்திர வாழ்வுதான் பெரிது. புதிய உலகத்தின் அறிகுறியாக அவர் இன்று வாழ்ந்து வருகின்றார்.

தெரிந்துகொள்ளுங்கள்

# கொம்பேறி மூக்கன் கதை

கொம்பேறிமூக்கன் என்ற பாம்பு கடித்தவுடன் சிறிது நேரத்தில் மனிதன் இறந்து விடுவானும். உடனே பாம்பு மயானத்திற்கு அருகிலுள்ள மரமொன்றில் ஏறிவிடுமாம். இறந்த மனிதனின் உடல் தகனம் செய்யப்படும் பொழுது தோன்றும் புகைமண்டலத்தை கண்டே பாம்பு கீழேயிறங்குமாம். ஆனல் பாம்பு மரத்தினின்று இறங்கியவுடன் மனிதனின் விடமும் இறங்கிவிடுமாம். ஆனல் அவன் உடல் தான் எரிக்கப்பட்டுவிட்டதே. இனி அவன் உயிர்ப்பிக்கவியலாது அல்லவா?

பாம்பு கடித்தவுடன் அம்மனிதனை ஒரு அறையில் பூட்டி வைத்துவிட வேண்டுமாம். பின்னர் வைக்கோலில் மனிதனைப் போன்ற உருவம் ஒன்று செய்து ஈமச்சடங்குகளுக்குரிய கோஷங்களுடன் மயானத்திற்கு எடுத்துச் சென்று எரிக்க வேண்டுமாம். பாம்பு புகையைக் கண்டு கீழே இறங்கியவுடன் அறையில் பூட்டி வைத்திருக்கப்பட்ட மனிதனின் விடமும் இறங்கிவிடும். அவன் மீண்டும் உயிர் பெற்றுவிடுவான்.

இதில் பாம்பிற்குச் சில கஷ்டங்கள் இருப்பதுபோல் எனக்குத் தோன்றுகின்றது.

(7ம் பக்கம் பார்க்க)



'அமெரிக்காவும் அதன் ஜனாதிபதிகளும்' என்ற ஆங்கில நூல் ஒன்று இளைஞர்களுக்கென புதிய பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் புத்தகத்தில் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் இந்தப்படம் வெளியாகியுள்ளது.

# எங்கள் இலங்கை

"ஆடலிறை"

கடலகத்து முத்துப்போல் எங்கள் இலங்கை — மிகக்
சாணுதுபார் பொலிவுடனே எங்கள் இலங்கை.
அடலேறும் மன்னவரை எங்கள் இலங்கை — பாயும்
அன்புடனே பெற்றதடா எங்கள் இலங்கை.

ஆழ்கடலின் முத்துப்போல் எங்கள் இலங்கை - என்றும்
அழகொளிருந் தீபமடா எங்கள இலங்கை.
சூழ்கடலின் பயனெல்லாம் எங்கள் இலங்கை — தவத்
திருவுடனே பெற்றதடா எங்கள் இலங்கை.

எல்லாளன் ஆண்டதடா எங்கள் இலங்கை — வீர
இராவணன் தேசமடா எங்கள் இலங்கை.
மல்லர்கள் பலபேரை எங்கள் இலங்கை — மிக்க
மகிழ்வுடனே பெற்றதடா எங்கள் இலங்கை.

ஆலயங்கள் நிறைந்ததடா எங்கள் இலங்கை — பவம்
அறுக்குமொரு தலமிதடா எங்கள் இலங்கை.
தாலமுயர் பனைநாடு எங்களிலங்கை — புத்தன்
தருமநெறி தழைத்ததடா எங்களிலங்கை.

தென்மொழியி னுறைவிடமாம் எங்களிலங்கை—இளஞ்
சிங்களத்தின் பிறப்பிடமாம் எங்களிலங்கை.
தேன்சொரியுங் களனியடா எங்களிலங்கை — உயர்
சிவஞெளியின் நிலையமடா எங்களிலங்கை.

கலைபயிலுஞ் சாலையடா எங்களிலங்கை — நல்ல
காவியங்கள் புகழ்ந்ததடா எங்களிலங்கை.
மலைநிறைந்த பூமியடா எங்களிலங்கை — கடல்
மாமணிகள் நிறைந்ததடா எங்களிலங்கை.

தென்னைமரச் சோலையடா எங்களிலங்கை — இன்பத்
தேயிலையின் விளைநிலமாம் எங்களிலங்கை.
பன்னரும் விளங்கும் எங்களிலங்கை — நீலக்
கடலலைகள் பொன்கொளிக்கும் எங்களிலங்கை.

# புத்தகப் படிப்பு மட்டும் போதாது மாணவர்களுக்கு டாக்டர் அறிவுரை

யாழ்ப்பாணம், வியாழன்

"தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒரு நாட்டுக்குச் செல்வம் போன்றவர்கள், அவர்களால் நாடு பயனடைவதுடன் பொருளாதாரத்துறையிலும் அது விருத்தியடைகின்றது." இவ்வாறு யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலய எச். எஸ். ஸி. வகுப்பு மாணவர்களின் ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மனேஜர் டாக்டர் வே. வேலுப்பிள்ளை தமது உரையிற் குறிப்பிட்டார்.

இவ்விருந்து வைபவம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. செல்வன் வி. இராமசுவாமி தலைமை வகித்தான்.

டாக்டர் வே. வேலுப்பிள்ளை தொடர்ந்து பேசியதாவது:

"விவசாய விருத்திக்கான வசதிகள யாழ்ப்பாணத்தில் இல்லை. எனவே, தொழில் விருத்தியில் மக்கள் மிக்க ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும். எஞ்சினியர்களும் பொஷியியல் வல்லுநரும் மட்டும் இருந்தாற் போதாது" தொழில்நுட்ப வல்லுநரும் ஒரு நாட்டுக்கு அவசியமானவர்கள்.


விஞ்ஞான விந்தைகள் நிறைந்த இவ்வுலகம் ஓர் அற்புதமான சிருஷ்டியாகும். மாணவர்கள் வெறும் புத்தகப் படிப்புடன் நின்றுவிடாது தங்களைச் சுற்றியுள்ள அற்புத சிருஷ்டிகளையும். மிக நுட்பமாக அவதானிக்க வேண்டும்.

மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY

மொத்த விற்பனை விநியோகஸ்தர்கள்:
- மில்லஸ்ர் லிமிட். கொழும்பு.
- எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருணகலை.
- என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
- கபூர்ஸ் ஹார்ட் வெயார், இரத்தினபுரி.
- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்
- எச். ஏ. பகஸ்ராவல அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே
பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை
யளிப்பதும் இதுவே




முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

Y-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

## சொம்பேறி மூக்கன் கதை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்த வட்டார மயானத்தில் பிணம் எரிக்கப்படும் என்ற அறிவு அப்பாம்புக்கு வேண்டும். புகை காணுவிடில் அது மரத்தினின்றும் இறங்காதோ? அடுத்ததாக சவங்களை எரிக்கும் வழக்கமில்லாத சமுதாயத்தினரைக் கடித்தால், பாம்பின் கதி, மனிதனின் கதி இரண்டும் கதையில் விளக்கப்படவில்லை.

### ஆதாரமுண்டு

ஆனால் இக்கனதக்குச் சிறிது ஆதாரமுண்டு. இப்பாம்புகள் சாதாரணமாக மரங்களில் வசிப்பவை. கடித்தவுடன் மரத்திலேறுவதை மக்கள் கண்டிருக்கின்றனர். எப்பாம்பு கடித்தாலும் பயத்தினுல் மனிதன் மயக்கமடையக்கூடும். பின்னர் சிறிது நேரத்தில் மயக்கம் தெளியக்கூடும். இவ்வுண்மைகளைப் பின்னி ஓர் அழகான கற்பனைக் கதை உண்டாக்கப்பட்டிருக்கின்றது.

எந்தப் பாம்பு கடித்தாலும் பயத்தினுல் மனிதன் சாகலாம். ஆனுல் சாரைப் பாம்புக்கோ கோடரிப்பாம்புக்கோ மனிதனை கொல்லும் விஷம் கிடையாது.

நாகங்களிலும் ஆண், பெண் உள. சாரைப் பாம்புகளிலும் இவையுண்டு. சாரையும் நாகமும் சேர்வதில்லை. அப்படிச் சேர்ந்தாலும் முட்டைகள் தோன்ருது என்பதே விஞ்ஞானிகளின் நம்பிக்கை.

ஃ ஃ ஃ

பாம்பைக் கண்டால் பயப்படத்தான் வேண்டும். எனவே விஷமுள்ள பாம்புகளைப் பிரித்தறியும் முறையை அறிந்திருப்பது நல்லது. நம் நாட்டிலே தான் பாம்புக்கடியால் இறப்பவர்களின் தொகை அதிகமாகும். இங்குதான் விஷமிறக்கும் மந்திரவாதிகளும் அதிகம்.

பாம்புகளில் பலவிதங்களுண்டு. இவற்றில் மிகச் சிலவே மனிதனைக் கொல்லக்கூடிய அளவிற்கு விஷமுள்ளவை.

எந்தப் பாம்பிற்காவது வால் துடுப்பைப் போல் தட்டையாக இருக்குமாயின் அது விஷமுள்ள பாம்பு. ஆனுல் இதனைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. இது ஒரு கடல் பாம்பு. நாட்டில் வசிக்காது. மேலும் இது திடீரென்று கடிப்பதுமில்லை.

ஆனுல் பாம்பின் வால் கூராகவிருந்தால் அது விஷமுள்ளதாகவோ அற்றதாகவோ இருக்கலாம். இத்தகைய பாம்பை உடனடியாகக் கொல்ல வேண்டும். பின்னர் இதன் தலையின் மேற் பக்கத்தைச் சோதிக்க வேண்டும். இப்பகுதி சிறுசிறு செதில்களால் மூடப்பட்டிருந்தால், இவை விஷமுள்ளவை. இவைதான் புடையன் பாம்புகள்.

இவற்றில் இருவிதங்களுண்டு. நம்பகுதிகளின் வரண்ட பிரதேசங்களில் வசிக்கும் சுருட்டையும் இவ்விதபாம்பே. முத்திரைப்புடையனும் இவ்விதபாம்பே.

ஆனுல் தலையின் மேற்பாகத்தில் சிறு செதில்கள் இல்லாமல் தட்டையான அலகுகள் இருந்தால் பாம்பு விஷமுள்ளதாகவோ அல்லது அற்றதாகவோ இருக்கலாம். இந்நிலையில் கொன்ற பாம்பின் மேல் உதட்டில் முன்னிருந்து மூன்ருவது செதில் கண்ணை சூழ்ந்திருக்கும். செதிலை ஒட்டியிருக்குமானுல் இது விஷமுள்ள நாகம்.

இப்படியில்லாவிடினும் உடனே விஷமற்றது என்று கூறிவிட முடியாது. பாம்பின் முதுகுத்தண்டின் மேல் உள்ள செதில்கள், பக்கங்களிலுள்ளவற்றை விடச் சிறிது பெரிதாகவிருந்தால் இது மிகுந்த விஷமுள்ள கட்டுவிரியன். இதனின் உடலைச் சூழ்ந்து மாறி கறுப்பு வெள்ளை நிற வளையங்கள் உண்டு.

மேற்கூறியவற்றுள் அடங்காவிடில்லையாயின் அவையெல்லாம் விஷமற்றவை. அவ்வளவு பயப்பட வேண்டியதில்லை.

## ஒலிம்பிக் கோஷ்டி வெற்றி

வவனியா, வெள்ளி

வவனியாவில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வவனியா ஒலிம்பிக் கோஷ்டிக்கும் வவனியா ஐக்கிய விளையாட்டுக் கழக 'பி' கோஷ்டிக்கும் இடையில் வவனியா முற்றவெளியில் நடைபெற்ற ஆட்டத்தில் ஒலிம்பிக் கோஷ்டி 8—1 கோல்களால் ஐக்கியவிளையாட்டுக் கழக 'பி' கோஷ்டியைத் தோற்கடித்தது. பல சந்தர்ப்பங்களை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இழந்துவிட்டது.

மத்தியஸ்தராக திரு. எம். அந்தோனிப்பிள்ளை கடமையாற்றினர்.

## டொன்பொஸ்கோ வெற்றி

ஊர்காவற்றுறை, வெள்ளி

கடந்த ஞாயிறன்று மாலை அர்ச். அந்தோனியார் கல்லூரிக்கு அருகே உள்ள மைதானத்தில் புனித டொன்பொஸ்கோ விளையாட்டுக் கழகத்துக்கும் பச்சை நட்சத்திர விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதை பந்தாட்டப் போட்டியில் புனித டொன்பொஸ்கோ விளையாட்டுக் கழகம் 2—0 கோல்களால் வெற்றியீட்டியது.

இதற்கு முன் நடைபெற்ற ஆட்டங்களில் வவனியா ஐக்கிய விளையாட்டுக் கழக 'ஏ' கோஷ்டியும் ஒலிம்பிக் கோஷ்டியும் முன்னணியில் நிற்கின்றன.

## புதிதாக 475 பண்ணைகள் அரசாங்கம் ஆரம்பிக்கும்


கொழும்பு, வியாழன்

475 தொகுதிப் பண்ணைகள் அரசாங்கம் புதிதாக ஆரம்பிக்கவிருக்கிறது. முடிக்குரிய நிலங்களும் காட்டுப் பகுதி நிலங்களும் தனியார்களது நிலங்களும் இதற்கெனப் பயன்படுத்தப்படும்.

ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பண்ணைமட்டுமே தான் அமைப்பது என முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனுல் தொகுதிகளின் நன்மைக்கேற்ப ஒவ்வொரு தொகுதியிலும் பல பண்ணைகளைத் திறப்பது என இப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.


ஒவ்வொரு பண்ணையும் 5–10 ஏக்கர்கள் பரப்பை உடையதாகவிருக்கும். விவசாயிகள் கோழி பன்றி, ஆடு,மாடுஆகியவற்றை வளர்ப்பதற்கும் அனுமதியளிக்கப்படுவர் கோழிப் பண்ணை ஆரம்பிக்க விரும்புவோர்களுக்கு சுமார் 4,000 ரூபாய் வரை அரசாங்கம் கடன் பணம் உதவும்.

மிருகப் பண்ணைகளை ஆரம்பிக்க விரும்புபவர்களுக்குக் கடன் பணம் வழங்கப்படும். கோழிப்பண்ணைகள் மிருகப் பண்ணைகள் நடத்துவோருக்கு வழங்கப்படும் கடன் பணத்தைத் திருப்பிக்கொடுக்க 3 வருடகாலம் அவகாசம் கொடுக்கப்படும்.





ஒரே வாரத்தில் மூன்று பெரும் தவறுகள்
—இத்தனைக்கும் காரணம்
சோர்வே

நாளெல்லாம் சோர்வுப்பிணியால் அவதிப்படுவோமானுல், நாமெல்லாம் தவறிழைக்கவும், கடமையை மறக்கவும், நம்மிடத்திலும் அடுத்தவரிடத்திலும் அசட்டையாகவிருக்கவும் செய்வோம்




இடையருத சோர்வுப் பிணி என்பது, அவயவங்களின் அசௌகரியத்தை துலக்கிக் காட்டும் ஒரு அறிகுறி என்பது டாக்டர்களுக்கு நன்கு விளங்கும். இருந்தும், உடலில் ஒருவித நோயுமில்லையென்று கருதும் பட்சத்தில், விரயமாகும் சக்தியை உடனுக்குடன் ஈடுபடுத்தத் தவறிவிடுகின்றீர்கள் என்றே கொள்ள வேண்டியுள்ளது




ஹார்லிக்ஸ் ஏன் வலிமையை மீட்டுத் தருகின்றது?

ஏனெனில் ஹார்லிக்ஸில் முழுக்க முழுக்க போஷாக்குச் சத்து அடங்கியுள்ளது! ஹார்லிக்ஸில், நல்ல, சுத்தமான, ஆடை நிரம்பிய பாலும், ஊட்டம் மிகுந்த கோதுமை மா மற்றும் மால்டெட் பார்லிச் சத்துக்களும் அடங்கியுள்ளன.




சுவையான பானைப் பருக, ஹார்லிக்ஸை தண்ணீரில் கலக்குங்கள். சாப்பாட்டு வேளைகளின்போது, அல்லது படுக்கைக்குப் போகுமுன் அருந்திவாருங்கள்.

JWT-HL 2214

சிறிது நாட்களில்




ஹார்லிக்ஸ்

அதிக சக்தியூட்டுவதற்கான அதிக போஷாக்குச் சத்து அடங்கியது

# ரயில் - வான் மோதல்
## 3பேர் மரணம் 8 பேர் படுகாயம்

கொழும்பு, வெள்ளி

காலி சென்றுகொண்டிருந்த ரயில், பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த வான் ஒன்றுடன் மோதியதால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக 3 பேர் இறந்தனர். 8 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 11 மணிக்குச்சிறிது பின்னர் ரயில்வே கதவுகளற்ற அகுன்கலாவிலுள்ள ரயில்வேகடவையில் நிகழ்ந்தது.

இந்தவிபத்தினுல் ரயில் சிறிது நேரத்துக்கு ஓடமுடியாத நிலையிலிருந்தது. ரயில் என்ஜின் மோதியதால் வான் பலத்த சேதத்துக்குள்ளாகியதென்றும் இறந்தபிரயாணிகளை வானுள்ளிருந்துவெளியே இழுத்தெடுக்க வேண்டியிருந்ததெனவும் தெரிகிறது.

இறந்தவர்கள் யாரென இன்னும் அடையாளம் கண்டு பிடிக்கப்படவில்லை.

இன்றுகாலை ரயில் பாதை ரயில் போக்குவரத்துச்செய்யக் கூடிய நிலையில் இருந்ததாக மருதானையிலுள்ள ரயில் சேவை கட்டுப்பாட்டுக் கந்தோர் அறிவித்தது.

---

## பஸ் புரண்டதால் மாணவர் காயமுற்றனர்

கொழும்பு, வெள்ளி

மாவனல்ல மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 35 மாணவர்களையும், 3 ஆசிரியர்களையும் ஏற்றிச் சென்றுகொண்டிருந்த தனிப்பட்ட பஸ் ஒன்று வீதியை விட்டுவிலகிப் பக்கவாட்டில் புரண்டதால் 6 மாணவர்களும் ஒரு ஆசிரியரும் படுகாயமுற்றனர். அவர்கள் உடனே கேகாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்து கொழும்பு—கண்டிவீதியில் நிகழ்ந்தது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாஸா விஜயா

(கொழும்பு) (வெள்ளவத்தை) (மட்டக்களப்பு)

மற்றும் 5 திரைகளில்

வீரம் நிறைந்த வெற்றிக்காவியம்!

என். டி. ராமராவ் • பி. கண்ணும்பா

ராஜசுலோசனு • பாலாஜி

எஸ். வி. சகஸ்ரநாமம் • ராஜகோபால்

ஆகியோர் நடித்த




மஞேஹரா (யாழ்ப்பாணம்)

மாலை 6-30 இரவு 9-30

ரஞ்சன் - பானுமதி

நடித்த

நிசான்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ராமச்சந்திரன்

மாதுரிதேவி

நடித்த

மந்திரிகுமாரி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வனபரிபாலனக் கந்தோர் இடமாற்றம் ரத்து?

கொழும்பு, சனி

**யாழ்ப்பாணத்திலிருக்கும் வனபரிபாலனக் கந்தோரை வவனியாவுக்கு மாற்றும் உத்தரவை காணி, விவசாய, நீர்ப்பாசன அமைச்சரான திரு. சி. பி. டி' சில்வா ரத்துச்செய்துவிட்டாரெனவும் யாழ்ப்பாணக்கந்தோர் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் ஒரு மாவட்ட வனபரிபாலன உத்தியோகத்தரின் கீழ் இயங்குமென்றும் தெரியவருகிறது.**

யாழ்ப்பாணவனபரிபாலனக் கந்தோரை வவனியா வனபரிபாலன உத்தியோகத்தரின் கீழ் கொண்டுவருவதையும் யாழ்ப்பாணக்கந்தோரை மாற்றுவதையும் பற்றி யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா நேற்று அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தினர். கடந்த 50 வருடகாலமாக இயங்கிவரும் யாழ்ப்பாணக் கந்தோரை வனபரிபாலனத் தேவைகள் அதிகரித்துக் கொண்டுவரும் இவ்வேளையில் மாற்றவேண்டாமென அவர் ஆட்சேபம் தெரிவித்ததாகத் தெரிகிறது. இதனையடுத்தே திரு. சி. பி. டி' சில்வா மேற்கண்ட முடிவைச் செய்துள்ளதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாண வனபரிபாலன உத்தியோகத்தர் கொழும்புக்கு மாற்றலாகியிருப்பதாகவும் யாழ்ப்பாணம், முருங்கன் ஆகிய இடங்களிலுள்ள வனபரிபாலனக் கந்தோர்கள் வவனியா வனபரிபாலன உத்தியோகத்தரின் மேற்பார்வையில் இயங்குமென்றும் அண்மையில் அரசாங்கம் ஓர் உத்தரவு பிறப்பித்திருந்தது.

சென்றடிசம்பர் மாதம் வரையில் யாழ்ப்பாண வனபரிபாலனக் கந்தோருக்குக் கீழ் இயங்கிவந்த ஒலுமடு, முல்லைத்தீவு ஆகிய இடங்களின் கந்தோர்கள் மார்கழி மாதத்தில் வவனியாக் கந்தோருக்குக் கீழ் கொண்டுவரப்பட்டன. முருங்கன் வனபரிபாலனக் கந்தோர் யாழ்ப்பாணக் கந்தோருக்குக் கீழ் இயங்கிவருகிறது.

ஒலுமடு, முல்லைத்தீவு, வவனியா, முருங்கன், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள கந்தோர்களெல்லாம் வவனியா வனபரிபாலன உத்தியோகத்தரின் கீழ் இயங்குவதற்கான ஓர் உத்தரவை அமைச்சு அண்மையில் பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவுக்கு யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜா மாநகரசபை சார்பில் பலத்த ஆட்சேபத்தைத் தெரிவித்திருந்தார். இது சம்பந்தமாக இம்மாதம் 23-ம் திகதி அமைச்சரைப் பேட்டி காணவும் ஏற்பாடாகியிருந்தது. உதவிமேயர் திரு. என். டி. செல்லத்துரையினுல் கொண்டுவரப்பட்ட பிரேரணையொன்றையடுத்தே மேயர் மேற்கண்ட நடவடிக்கையெடுத்திருந்தார்.

## எஸ். ஜே. வி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேயர் திரு. டி. எஸ். துரைராசா தலைமையில் மாநகர அங்கத்தவர்களும் வரவேற்பு அளிப்பார்கள்.

பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாண மாநகர சபைக்கு திரு. செல்வநாயகம் அழைத்து வரப்படுவார். வழிநெடுகிலும் அவருக்கு வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் நேற்று முதலே செய்யப்பட்டுள்ளன. வீதிகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் நகர மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படும்போது வழி நெடுகிலும் வரவேற்பளிக்க ஸ்தலஸ்தாபனங்களும், பொது நிலையங்களும் தனிப்பட்டவர்களும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். உரும்பிராயில் பெருமளவில் வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாலை 1 மணியளவில் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் பிரமுகர்களின் சந்திப்பு ஒன்று நடைபெறும். மேயர் திரு. டி. எஸ். துரைராஜா தலைமையில் அங்கு வரவேற்பு அளிக்கப்படும்.

## வல்வெட்டித்துறை.....

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பவம்பற்றி தவருன செய்தி அளிக்கப்பட்டிருக்கிறது. இதலேயே அவர் உண்மைக்கு மாருன, பார்லிமெண்ட் முறைக்கு ஒவ்வாத அறிக்கையை வெளியிட்டிருக்கிருர். இது பச்சைப் படுகொலையாகும். கடற்கரையில் இது நடந்திருக்கிறது.

சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென்று சந்தேகிக்கப்படுபவர்களை கைது செய்து பிணையில்விட மறுக்கிருர்கள். ஆனல் இவ்வழக்கிலோ காட்டுமிராண்டியான கொலைகாரர் பிணையில் விடப்பட்டிருக்கிருர்கள். இது எங்கள் மக்களுக்கு ஆத்திரமூட்டுவதாக உள்ளது. கொடுமையை மக்கள் எதிர்ப்பார்கள்.

திரு. லெஸ்லி குணவர்தன (சமசமாஜ்)' வல்வெடித்துறை சம்பவம் ஆபத்தானதாகும். இதை அரசாங்கம் அற்பவிஷயமென்று ஒதுக்க முடியாது. ராணுவத்தினர் ஒரு ஆளைச் சுட்டிருக்கிருர்கள். அரசாங்கம் தக்க விசாரணை நடத்தவேண்டும்.

### நிதிமந்திரி பதில்

நிதிமந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இக்கேள்விக்கு பதிலளிக்கையில் கூறியதாவது:

இவ்விஷயமனைத்தும் இப்போது ஒரு மாஜிஸ்திரேட்டின் விசாரணையில் இருந்து வருகிறது. விசாரணை நடந்துவரும் இச்சமயத்தில் இச்சபைக்கு நான் எதுவும் கூறவிரும்பவில்லை. விசாரணை முடிந்ததும் எல்லாவிபரங்களும் இச்சபைக்குத் தெரிவிக்கப்படும். பிரதம மந்திரிக்கு யாரும் தவருன செய்தி அளிக்கவில்லை:

இத்துடன் பார்லிமெண்ட் சபை இம்மாதம் 23-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## கன்னங்கராவின் பென்ஷன் மனு ஆராயப்படும்

கொழும்பு, வெள்ளி

இன்று மாலை பார்லிமெண்டில் பல கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. எம். பி. க்களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டமொன்றை தலைவர் தயாரிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

முன்னுள் மந்திரி திரு. ஸி. டபிள்பு. டபிள்யு. கன்னங்கரா தமக்குப் பென்ஷன் வேண்டுமென்று கேட்டுக்கொண்ட மனுவை . அரசாங்கம் தக்கபடி பட்டுவாடா செய்யும்படி தீர்மானிக்கப்பட்டது.

அரசியல் சீர்திருத்த விசேஷக் கமிட்டியின் மெம்பர்கள் எண்ணிக்கையை பதின்மூன்றிலிருந்து பதினேழாக உயர்த்தும்படி தீர்மானிக்கப்பட்டது.

## ககாரின் இலங்கை வருகிருர்

கொழும்பு, வெள்ளி

சோவியத் வானவெளி வீரர் மேஜர் ககாரின் வருகிறமாதம் 7ம் திகதி இலங்கை வருகிருர். அவர் 11ந் திகதிவரை இங்கு தங்கியிருப்பார்.



## இந்துக் கல்லூரி மாணவனுக்கு முதலாவது பரிசு

இலங்கை இரசாயன சங்கத்தினுல் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எச். எஸ். ஸி. இறுதி வகுப்பைச் சேர்ந்த மாணவன் டி. ஸ்ரீஜெயராஜாவுக்கு முதலாவது பரிசு வழங்கப்பட்டுள்ளது. இவர் "இரசாயனத்தில் எலெக்ரன்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதியனுப்பியிருந்தார். இவர் கல்லூரி விஞ்ஞானக் கழகத்தின் செயலாளரா இருக்கிருர். கடந்த வருடம் கல்லூரி மாணவர்கள் வருடாந்த வெளியிடாகிய "இந்து இளைஞனின்" ஆங்கில பத்திராதிபராக இருந்திருக்கிருர். இம்மாத இறுதிப் பகுதியில் இலங்கை பல்கலைக் கழக வைத்திய பகுதி பிரவேசப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கிருர். பரிசு டிசம்பர் 9-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் இலங்கை இரசாயன சங்கத்தின் பொதுக் கூட்டத்தின் போது வழங்கப்படும்.

## 'ஈழநாட்டவருக்கு பக்தி அதிகம்'
### யாழ்ப்பாணத்தில் திருமதி கே.பி. சுந்தராம்பாள்

யாழ்ப்பாணம், சனி

திருமதி கே. பி. சுந்தராம்பாள் நேற்று மாலை 'விமான மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். விமான நிலையத்தில் நீர்வேலி பிள்ளையார் கோயில் தேர்த் திருப்பணித் தலைவர் திரு. கே. வி. கனகரத்தினமும்பரியாரும், திவ்விஜ ஜீவன சங்கத்தாரும் ஏராளமான ஆண்களும், பெண்களும் கூடி, ஸ்ரீமதி சுந்தராம்பாளை கரகோஷங்களுடன் மாலைசூட்டி வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து நீர்வேலி பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் வழியில் பலர் ஆங்காங்கேகூடிவரவேற்றனர். கோவிலில் நடக்கும் தேர் திருப்பணியைத் திருமதி சுந்தராம்பாள் பார்வையிட்டார்.

"இன்னிசை மூலம் ஆஸ்திக பிரசாரம் செய்வதே நமது வாழ்க்கையின் குறிக்கோள்" என்று கூறிய ஸ்ரீமதி சுந்தராம்பாள், ஈழநாட்டில் மக்களுக்குப் பக்தி அதிகமென்பதைத் தாம் அனுபவத்தில்கண்டுள்ளதாகப் பாராட்டினர்.

இன்றுமாலை நகர மண்டபத்தில் அவர் கச்சேரி செய்துவிட்டு,நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இந்தியா திரும்புகிருர்.

---

கொழும்பு, வெள்ளி

200 தொன் புளியையும் 500 அந்தர் சர்க்கரையையும் உடனடியாக இறக்குமதி செய்யுமாறு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தை உணவு வர்த்தக அமைச்சு கேட்டுள்ளது.

புளி, சர்க்கரை தட்டுப்பாட்டைக் குறைப்பதற்காகக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் சமீபத்தில் குறைந்த அளவில் இவ்விரு பொருள்களையும் இறக்குமதி செய்தது